ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 3.] 24—12—44 [இதழ் 40.

## மீட்சி எப்போது?

பாரதிதாசன்.

ராகம்:- தோடி. தாளம்:- ஆதி.
(தாசரதே என்ற மெட்டு.)

பல்லவி.

காலைமுதல் மாலை வரை ஏருழவர்
பசியால் மெலிவார் நோயினில் வாடி

அனுபல்லவி.

தோலைமூட ஆடை ஏதும் இலை—உடல்
தூய்மைக்கு யாதொரு வழியுமே இல்லையே

சரணம்.

அண்டிவாழ ஒரு விடில்லை பிள்ளைகள்
கல்வி அடையவோ வழியிலை மீட்சியும்
கண்டதில்லை நாளுமே வீழ்ச்சி எனில்
கோரும் பொதுவாழ்வு தூய்மை பெறுமா.

# பெரியபுராண ஆராய்ச்சி

5-ம் பாகம்

ஈழத்தடிகள். பீ. ஏ.

## சம்பந்தர் வரலாறு.

இனி, எல்லாமாய் அல்லதுமாய் உள்ளது. எதுவோ அதுவே 'சிவன்' என்று சொல்லப்படுகின்றது. உலகிற் காணப்படும் எல்லாப்பொருள்களிலும் நிறைந்து நின்று காட்சியளிப்பதாகச் சொல்லப்படும் அந்தச் சிவன், பின்னர், அப்பொருள்களுக்கு வேறாக அதாவது அப்பொருள்களோடு தொடர்பின்றித் தனித்து நிற்பதாகவோ, அல்லது இல்லையென்று பொருள்கொள்ளும்படியாகவோ சொல்லப்படுவதன் காரணம் யாதோ? கடவுள் உண்டென்று கூறுவார்க்கும், இல்லையென்று கூறுவார்க்கும் இடமளித்தல் வேண்டுமென்ற பரந்தநோக்கம்கொண்டு இவ்வாறு சொல்லப்பட்டதா? அல்லது, கடவுளைப்பற்றி ஆராய்ந்ததில் அதன் முடிவு இதுவென அறிந்துகொள்ளமுடியாதநிலையில் ஏற்பட்டுள்ள மயக்கஉணர்வு தான் இவ்வாறு கூறும்படி செய்ததோ? இருக்கவேண்டிய இன்றியமையாமை எதுவும் வேண்டப்படாத ஒன்றை இருப்பதாகச்சொல்ல வந்தவர்கள், தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிவைக்க முடியாது தடுமாறி நின்ற நிலையையே இக்கூற்று எடுத்துக்காட்டுகின்றது.

இல்லையேல், நம்பினோர்க்குநடராசன், நம்பாதவர்க்கு இயமராசன் என்றுகூறியவரே, நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவே நிற்பவன் சிவன் என்று கூறியிருப்பாரா? நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் நடுநிற்கும் சிவன், நம்பினோர்க்கு நடராசனாகவும், நம்பாதவர்க்கு இயமராசனாகவும் யாங்ஙனம் இருத்தல் முடியும்? நல்லது கெட்டதுஆகிய இரண்டிலும் சாராது நடுநிற்கும் ஒருநடுவனுக்கு (சிவனுக்கு) நடராசன் இயமராசன் என்ற இருவேறு இயல்புகளோடு கூடிய இருவேறு பெயர்களை அமைத்த அறியாமைக்கு அளவுகோல் எங்குளது? கடவுட்டன்மைக்கு விளக்கங்கூற வந்து தங்கள் கருத்துக்களைக் கக்கியவர்களின் அறியாமைக்கு அளவுகோல் இல்லையென்று யாம் கூறுவதில் சிலருக்குச் சீற்றமும் பலருக்குப் பதட்டமும் உண்டாகலாம். ஆனால் அவர்களின் சீற்றமும் பதட்டமும் சிறுமதியுடையோராலன்றி மற்றையோரால் ஒருபோதும் வரவேற்கப்படமாட்டாது. ஏனென்றால், அவர்கள் கூறும் சிவன், 'அந்தணர்தம் சிந்தனையில் இருப்பவராகவும், யாருக்கும் தெரியாத தத்துவனாக உள்ளவர்' என்றுமே கூறப்பட்டிருப்பதால் என்க. அந்தணர்களுடைய சிந்தனையில் உள்ள சிவன், யாருக்கும் தெரியாத தத்துவனாக யாங்ஙனம் இருத்தல் முடியும்? "யாருக்கும்" என்ற இச்சொல் அந்தணர்களையும் உள்ளடக்கிய சொல்லாகத்தானே பொருள் கொள்ளும்படி கூறப்பட்டிருக்கிறது! ஒருக்கால், "அந்தணர்தம் சிந்தனைக்கன்றி மற்றெவருக்கும் தெரியாத தத்துவன்" என்று கூறப்பட்டிருந்தால் அங்ஙனம் கூறியவர்களின் மன அமைதிக்காகவாவது அதனை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். மற்று, யாருக்கும் தெரியாத ஒருவன் அந்தணர்தம் சிந்தையில் இருக்கிறான் என்று கூறுவதைப் பொய்யும் மெய்யும்கலந்த புளுகு என்று முடிவுகட்டுவதைத்தவிர, இதற்கு வேறு மாற்றம் யாது காணமுடியும்?

இனிப், 'பொய்யும் மெய்யும் கலந்த புளுகு' என்று யாம் கூறுவதை ஆதாரமாக வைத்துச், 'சிவன்' என்று கூறப்படும் இச் சொல்லில் யாதோ மெய்யும் இருக்கிறதாகவன்றோ கூறப்படுகிறதென்று ஐயப்படவேண்டியதில்லை. ஈண்டு யாம் கூறிய 'பொய்' என்பது, அந்தணர்தம் சிந்தையில்சிவன்இருக்கிறார் என்பதையே. 'மெய்' என்பது யாருக்கும் தெரியாத தத்துவன் என்பதையே. முன்னதைப்பொய் என்றும், பின்னதை மெய் என்றும் ஏன் கூறினோமென்றால், யாருக்கும் தெரியாத ஒன்று அந்தணரின் சிந்தைக்குமட்டும் தெரியக் கூடியதாய் இருக்கமுடியாதென்பதனாலும்; இல்லாதது எதுவோ அதுவே யாருக்கும் தெரியாமல் அல்லது யாராலும் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கும் என்பதனாலுமே, 'அந்தணர்தம் சிந்தையான்' என்பதைப் பொய் என்றும், 'யாருக்கும் தெரியாத தத்துவன்' என்பதை மெய் என்றும் கூறினோம் என்க.

இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமானால், இருக்கிறதாகச் சொல்லப்படும் அல்லது கருதப்படும் ஒரு பொருள், எக்காலத்திலாவது — எவராலாவது — எப்படியாவது எடுத்துக்கூறக்கூடியதாய் — 'இதுதான் அது' என்று சுட்டிக்காட்டக் கூடியதாய் இருக்குமே தவிர, எக்காலத்தும் — எவ்விடத்தும் — எவராலும் தெரிந்துகொள்ள முடியாத தத்துவப் பொருளாக இருக்கமுடியவே முடியாது. இதுபோலவே, யாருக்கும் தெரியாத ஒன்று அந்தணர்தம் சிந்தைக்கு மட்டும் தெரியக்கூடியதாய் இருக்கவும் முடியாதென்று கொள்க. எனவேதான் இக்கூற்றைப் பொய்யும் மெய்யும் கலந்தபுளுகென்று கூறினோம்.

அதுவேயுமன்றிப், பொய்யும் மெய்யும் கலந்த புளுகு என்று யாம் கூறியதற்கு இன்னுமொரு வலிய சான்று தருகின்றோம். அதாவது, ஒன்றைப்பற்றி, ஒரு இடத்தில் ஒரு விதமாகவும், இன்னொரு இடத்தில் இன்னொரு விதமாகவும், பிறிதொரு இடத்தில் பிறிதோர்விதமாகவும், மற்றோர் இடத்தில் மற்றொருவிதமாகவும் முன்கூறியதற்குப் பின் கூறியவற்றை மாறுபடக் கூறிக், கற்பார் கேட்பார் ஆகிய இருசாராருக்கும் விளங்காதமுறையில் விளக்கங் கூறவந்தவர்களின் 'மெய்' அதாவது 'உடம்பு' பொய்யையே வடிவமாகக்கொண்டுள்ளமையால் புனைந்துரைக்கப்பட்ட கூற்றாகும், ஆகவே! அதனைப் பொய்யும் மெய்யும் கலந்த புளுகு என்றும் கூறினோம்.

யாம் இங்ஙனம் கூறுவதினின்றும், சிவனிடத்தோ அன்றி அதன் பாதுகாவலரிடத்தோ எமக்குப் பொறாமையோ அழுக்காறோ இருப்பதாக எவரும் கருதிவிடக்கூடாது. சிவத்தன்மைக்கு இலக்கணங்கூறி, அதன்மெய்ம்மையை நிலைநாட்ட விரும்புவோர், தாங்கள் கூறும் சான்றுகள் அல்லது காரணங்கள் அறிவுக்குப் பொருந்தக்கூடியனவாகவும், மக்களின் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியனவாகவும் இருக்கக்கண்டால், அதனை யாரே ஒப்புக்கொள்ளாது மறுப்பர்? ஆனால், மருந்துண்டு நோய் நீங்கப்பெற்றவன், மருந்தளித்த மருத்துவனுக்கு நன்றிசெலுத்தாது, மாரியம்மனுக்குப் பொங்கலிட்டுக் காணிக்கை செலுத்துவதே சரி என்ற முறையில் சிவத்தன்மையின் உண்மையை விளக்கவரின், அதனை அறிவுடைய உலகம் அணுவளவும் ஒப்புக்கொள்ளாது என்பதனையும் ஈண்டு நினைவுறுத்தி மேற்செல்வாம்.

இனி, "யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி" என்ற பெருமை சைவ சமயத்திற்குக் கொடுக்கப்பட்டு, அதனை "இராசாங்கத்தில் அமர்ந்த வைதிக சைவம்" என்றும் புகழப்பட்டிருக்கிறது. எனவே, எந்தச்சமயத்தவராலும் வணங்கப்படும் இயல்பைப் பெற்றுள்ளதாகச் சொல்லப்படும் சைவசமயம், சம்பந்தர் காலத்தில், அதாவது, புத்தம் சமணம் ஆகிய இரண்டு சமயங்களுமே இராசாங்கத்தில் அமர்ந்து பெருமையும் புகழும் பெற்றிருந்ததை ஒழிக்கவந்த சம்பந்தர் காலத்திலும், அவருக்கு முற்பட்டகாலத்திலும், எந்தச் சமயத்தவராலும் வணங்கப்படாமல், இகழப்பட்டு—ஒதுக்கப்பட்டு இருந்ததன் காரணம் யாதோ? ஒருக்கால் சம்பந்தர், காலத்திற்குப் பின்னரே இச்சைவம் யாவராலும் வணங்கப்படும்சமயமாக ஆயிற்றென்று கூறுவதானாலும், அக்கூற்றும் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லையே! ஏனென்றால், சம்பந்தர் காலத்திற்குப் பின்னர்தான் முகம்மதிய (ஸ்லாம்) சமயமும், கிறித்து சமயமும் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுப் பலரால் வணங்கப்பட்டதோடு, சைவ சமயம் அவர்களால் இகழப்பட்டும் வந்தது—வருகின்றது.

(10-ம் பக்கம் பார்க்க)

# சுயமரியாதை நீதி.

*"சுயமரியாதை நீதி" என்ற தலைப்போடு 12-4-34-ல் லோகோபகாரி என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதிய கட்டுரைக்குத் தோழர். சே. தே. நாயகம் அவர்கள் எழுதிய பதில் கீழே தரப்படுகிறது.*

12—4—1934-ல் வெளிவந்த லோகோபகாரியில் மேலேகண்ட தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை அச்சிடப்பட்டிருக்கிறது, அது "ஆஸ்திகன்" என்ற பத்திரிகையின் மறுவெளியீடு என்றோ, "ஆஸ்திகன்" என்ற புனைபெயர் கொண்டார் ஒருவருடைய கட்டுரை என்றோ தெளிவாகத் தெரியவில்லை. எனினும் சுயமரியாதை என்பது வடமொழிச்சொற்றொடர் என்றும், அதற்குத் தன்மானம் என்பது தமிழாகும் என்றும் துவக்கியவர், ஆஸ்திகன் என்ற வடமொழிப்பெயரிலும் அதைக் கூடியவரை வடமொழி எழுத்திலே எழுதுவதிலும் பற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர்கள் தன் மானம்பேணலைப் பெரிதும் போற்றிவந்திருக்கிறார்கள் என்றும், பிறர்க்கு இடையூறின்றி ஒவ்வொருவரும் தன் மானப்படி வாழ உரிமை உடையார் என்றும் துவக்கி அதற்கு மாறாகத் தன்மானக்கொள்கையுடையார் பிறர் மானத்திற்குப்பழுது செய்கிறார்கள் என்றும், பிறர் கூட்டத்தில் வந்து தங்கள் கொள்கைகளைப் புகுத்த முயற்சிசெய்கிறார்கள் என்றும் சொல்லி, இதற்கு நியாயத்தைக் கூறி வெளிப்படுத்தவேண்டுமென்றே கேட்டு முடிக்கிறார். பண்டைத்தமிழ்மக்கள் தன் மானம் பேணிவாழ்ந்தார்கள் என்றும், மதியாதார் முற்றம் மதித்து ஒரு காற் சென்று மிதியாமையையும், உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமையையும், மானமழிந்தபின் வாழாமையின் இனிமையையுங் குறிக்கும் தமிழ் நூற்கள் அதற்குச்சான்று என்றும் கூறுகிறார். ஒரு பார்ப்பன ஆண் மற்றமூன்று இனப் பெண்களுடன் கூடிவாழலாம் என்றும், பிந்திய மூன்று இன ஆண் முதல் இனப் பெண்ணைப் புணர்ந்தால் இரும்புத்தூணைப்பழுக்கக் காய்ச்சி அணைக்கச் செய்யப்படவேண்டும் என்றும் மநுநீதியில் சொல்லியிருப்பதை ஒப்புக்கொண்ட பண்டைக்காலத் தமிழன் தன் மானம் பேணலை எவ்வளவு தூரம் நடவடிக்கையில் காட்டினான் என்றும் தெரியும், பிறர் மானத்தைக் கெடுக்க எண்ணிய மநு என்பார் ஒருவர் அதை எழுதினாரென்றும் அதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ளவில்லை எனவும் சொல்லலாம். மநு வடமொழியில் எழுதினதைத் தமிழ்மக்கள் படிக்கும் பொருட்டுத் தமிழ்ப்படுத்தியது யார்? அக் கொள்கையை ஒப்புக்கொண்டு அதைப் பரப்ப விருப்பங் கொண்டவராகத்தானே இருந்திருக்க வேண்டும். அப்படித்தமிழ்ப்படுத்தியவரும் பிறர் மானங்கெட விரும்பிய குறும்புப் பார்ப்பனராக இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அம்மொழிபெயர்ப்பு தமிழ்நூலைத் தலைமுறை தலைமுறையாகக் கை கடுக்கக் கண்பூக்க ஏட்டில் எழுதிப் போற்றி வந்தது யார்? அவர்கள் தமிழராகத்தானே இருந்திருக்க வேண்டும். தன்னை இழிவு படுத்தும் நூலைப் பேணி வந்தவர்கள் தன் மானம் பேணுவதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள் என்று நம்ப இடமிருக்கிறதா? மநுநீதி கண்ட மன்னன் என நம் முன்னோர்கள் பெரும்பெயரிட்டழைத்த தமிழ் மன்னர்கள் மேலே சொன்ன மநுநீதியையுஞ்சேர்த்துக் கொண்டவர்கள்தானே. தவிரவும்காளிகோயில்களில் ஆடுகோழிகளைக்கொலைசெய்வது கூடா ஒழுக்கம் என்று துண்டுத் தாட்களிலும், கட்டுரைகளிலும் ஓயாமல் வெளியிடுவது எதைக் காட்டுகிறது? அவ்வழக்கம் நம்மக்களிடை பரவிநிற்கிறதென்பதையா, அவ்வழக்கம் நம்மிடை இல்லை என்பதையா? "ஆடு, மீன், கோழி, அருந்துவோர்க்கெல்லாம் வீடில்லையென்றுரைக்கும் வேதம்" என லோகோபகாரியில் அடிக்கடி அச்சிடுவது எதைக் காட்டுகிறது? ஆடு, மீன், கோழி, அருந்துவோர் தமிழ் நாட்டில் பலர் இருக்கிறார்கள், இன்றும் பெருகுகிறார்கள் என்பதையா, அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதையா? உற்று நோக்குவோர்க்கு முந்தியதைத் தான் என்பது தெரியும். ஐம்பது அல்லது நூறு ஆண்டுகட்குப்பின் இந்த லோகோபகாரித் தாளை ஒருவர் படித்துவிட்டு, 1934-வது ஆண்டில் தமிழ்நாட்டில் புலாலுண்போர் இல்லையென்று இதிலிருந்து முடிவுசெய்வதை ஒக்கும் தமிழ் மூதுரை நூல்களைப் படித்துப் பண்டைத் தமிழ்மக்கள்மானங் காத்து வாழ்ந்தார்கள் எனச்சொல்வது, மதியாதார் முற்றம் நுழைவோர் பலர் இருந்ததையும், வாரீர், வாரீர், என்று சொல்லாதார்வீட்டில்நுழைந்துகாத்திருந்துண்டோர் பலர் இருந்ததையும், மானங்கெட்டு வாழ்ந்தோர் பெருகி வந்ததையும் பார்த்து, அவர்களுடன்பிறந்த, தற்காலம்போல் அக்காலத்திலுமுள்ள தன்மானக்கொள்கையுடைய, சிலர் மனமிடிந்து சொன்ன சொற்களே நாம் இப்பொழுது மூதுரையிற் படித்து மயங்குவன. ஒரு வேளை முன்வாழ்ந்தோர்மானமழியாது வாழ்ந்ததாகவே வைத்துக்கொள்வோம். அது வாழ்வை இன்னும் இழிவுபடுத்தியல்லவா காட்டுவதாகும். இருப்புப் பாதை நிலையத்திலே கொல்லரைவிட கருத்த தோலும் இருப்புப் பாதை எரிவண்டிக்கரி ஆலைவிட அழுக்கடைந்த துணியும், தோளில் தன் வேலையைக் குறிக்கும் பருத்தி நூலும் உடைய ஒருவர் வடை விற்றுக்கொண்டு வருகிறார். அவரைப்போல் குற்றேவல் செய்யுங் குறியாகிய பருத்தி நூலணிந்த, வண்டியிலுள்ள மற்றொருவர் முந்தியவரைக் கூப்பிட்டு அவரிடமுள்ள வடைகளை கையால் தொட்டும், மூக்கால்முகர்ந்தும், ஒரு துண்டு பிட்டு வாயில் போட்டுப் பார்த்தும், தன் மனைவியையுங் குழந்தைகளையும் அவ்வாறே செய்து பார்க்கச் செய்தும்தங்களுக்குவேண்டியவைகளைப் பொறுக்கிஎடுத்துக்கொண்டு மீதத்தைப் பண்டம் விற்றுப் பிழைக்கும் பருத்தி நூல் காரரிடம் போட்டுவிடுகிறார். அதே வண்டியில் பக்கத்திலிருந்த குற்றேவல் செய்யுங் குறிநூல்காரரைப்பணிஆளாகக் கொள்ளும் பண நிலைமையிலுள்ள நூலணியாத் தமிழர் ஒருவர், "சாமி, எனக்கும் ஒரு அணாவுக்கு வடை," என்கிறார். பக்கத்திலிருந்தபருத்திநூல் காரரும் அவர் மனைவி மக்களும் தொட்டு,முகர்ந்து பிட்டு வாயில்போட்டுக் கழித்த வடைகளை அவர்போட இவர் ஏந்திக் கொள்கிறார். அவற்றுள் ஒன்றில்உள்ளிருந்து நூல் வருவதைப் பார்த்தவுடன் வடை எனக்கு வேண்டாம் என்கிறார். "சூத்திரன் தொட்ட வடையை நான் வாங்குவேனா?" எனப் பண்டம் விற்ற பருத்திநூல்காரர் சொல்லுகிறார். "சாமி சொல்வது சரிதானே" எனப் பக்கத்திலிருப்பவர்கள் எல்லாம் கூடி உரைக்கிறார்கள். வயிறு பசித்த தமிழர் ஒரு அணாவைப் பருத்திநூல்காரரிடம் கொடுத்துவிட்டு, அவருடன் வந்த அவர் பக்கத்தில் நின்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த அவருடைய நாயிடம் ஊசல்வடையை எறிந்துவிட்டு, இடுப்பிலிருந்தபட்டுப்பையிலிருந்து நீற்றை எடுத்து கிழக்குமுகமாகத்திரும்பிச்சப்பணமிட்டு நெற்றியில் பூசிக்கொண்டு, காய்ந்ததால் ஊசாது மீந்த வடையை வாயில்போட்டு வலுத்த பல்லால் மெல்லுகிறார். பண்டம் விற்றவருடைய தம்பி ஒருவர் தண்ணீர்கொண்ட வாளியை ஒரு கையிலும், தகரக்குவளை கோர்த்த கம்பியை இன்னொரு கையிலுந்தாங்கி, உடல் வியர்வையில் நீர் சொட்டுகள் இரண்டிலும் விழ வருகிறார். மனைவி மக்களுடன் வயிறார உண்ட பருத்திநூல் காரர் தன் செம்பை வாளியில் முக்கித் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு மறுபடியும் முக்கி, நிறைசெம்பு எடுத்துக் கொள்கிறார். பசிநாய்க்கு ஊசல்வடை

(4-ம் பக்கம் பார்க்க)

## சுயமரியாதை நீதி.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

உணவிட்ட தமிழ்ப்பெருமகர் கம்பியில் தொங்கிய குவளையை எடுத்து எந்த வாளியில் கிடந்த இன்னொரு குவளையால் ஊற்றின தண்ணீர்விழ வாங்கி வாயில் கிடந்த வடை நனையக்குடித்துவிட்டு, மறுபடியும் சிறுநீர் வாங்கிய குவளையை அலம்பித் தண்ணீரை வடித்து கம்பியில் கோர்த்துவிட்டு மறுபடியும் கிழக்குநோக்கிச் சம்மணமிட்டுநீறணிந்து, "வேயுறு தோளிபங்கன்" எனத்துவக்கிய கோளறுப்பதிகம் பாடுகிறார். மானங்கெடாமல் வாழ்ந்ததாகக் கூறப்படும் பழைய தமிழர்களின் பின் தோன்றல்களின் மேற்கண்டதற்கால மானங்கெட்டவாழ்க்கையைப் பார்த்துவிட்டு, "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றும்

"இன்றியமையாச் சிறப்பின
வாயினுங்
குன்ற வருப விடல்"

என்றும்பாடம் ஒப்பிப்பதுதான் நாம் செய்யக்கூடிய வேலையாகும். சோற்றுக்கடையில் சாப்பிட வரும் பருத்தி நூற்காரர்கள் செருப்பைக் கழற்றியிருக்கும் இடத்திலும், அவர்கள் சாப்பிட்ட எச்சிலை அப்புறப்படுத்தி இடத்தைத் துப்புரவு செய்த துடைப்பமும் நாற்ற நீர்ச்சட்டியும் இருக்கும் இடத்திலும், உட்கார்ந்து இலையில் போட்டதைச் சாப்பிட்டுவிட்டு, இலையையெடுத்து வெளியில் நிற்கிற கழுதையிடம் சேர்த்துவிட்டு சாப்பிட்ட இடத்தை நாற்றநீரால் தேய்த்துவிட்டுக் கையைக் கழுவிச் செம்பைக் கவிழ்த்துவிட்டு, இடுப்பிலிருக்கிற துட்டைக் கொடுத்துவிட்டு, நீறணிந்து வெளியில் வரும் தமிழ்ப் பெருமக்களைப் பார்த்து, "உண்ணீர், உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணுமை கோடிபெறும்" என்றும்,

தலையி னிழிந்த மயிரனையர்
மாந்தர்
நிலையினிழிந்தக் கடை

என்றும் பாடிய தமிழறிஞர்களின் தம்மினப்பற்றையும் நுணுக்க அறிவையும் யார்தான் பாராட்ட மாட்டார்கள்? கோயிலில் கையாலுந் துணியாலுந் தொட்டால் தீட்டாகி விடுமென்று கையைத் தட்டியும் வாழை மட்டையாலடித்தும்விலக்கிக்கொண்டுபோவதற்கு இடம் விட்டுக்கொண்டிருப்பது தமிழ்மக்களின் பெருந்தன்மைக்குரியதாகும். எரிகிற நூடத்தை முதலில் நிற்கிற பருத்திநூல்காரர்களுக்கும் மனைவி மக்களுக்கும் தனித்தனி தொட்டுப் பார்க்கவிட்டுவிட்டுத் தமிழர் நூற்றுக்கதிகமானவர் இருக்குமிடத்தில் கொட்டிவிட்டுப்போவதும், அது அவிந்துவிடுமுன் அதன் நூட்டைக் கண்ணிமையால் அளந்து பார்க்க ஆண் பெண் முறையின்றிப் போட்டி போடுவதும், நீற்றையாவது துளசி இலையையாவது, மக்களுக்கு ஆகாத ஒன்றை ஆடு கோழிகளுக்கு எறிகிறமாதிரி எறிவதும், தமிழ் மக்கள் பொறுமையை அளக்கும் பொருட்டு செய்யும் செய்கைகளாம். சென்னை ஆட்சி முதலமைச்சர் ஒருவருக்கும் அவர் மனைவியாருக்கும் நடந்த மானமுள்ள ஏற்பாடு இதுதான். இதைப் பார்த்தபின்,

மதியாதார் முற்றம்மதித்தொரு
கால் சென்று
மிதியாமை கோடிபெறும், என்றும்
ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்
தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று

என்றும் சொல்லிப் பெரும் பொறுமையுடையவனும் மனம் ஏங்காதிருக்க முடியுமா? மானங்கெட்ட அறிவிலாரின் கண்கூடாக்கண்டதற்காலவாழ்வும், ஒருவாறுஊன்றி உணரக்கூடிய அவர்தம் முதற்காலவாழ்வும் எப்படிப்பட்டது எனத் தெளிவுபெறப்போதியசான்றுகள் இவைபோல் பலவுள.

தன்மானக் கொள்கையுடையார் பிறர் மானம் பேணாதவர்கள் என்றும், "சுயமரியாதை விரோதிக்குச் செருப்படி," "திருநீறிடுகிறவர் திருடர்," "மறு பிறப்புக் கொள்கையுடையவன்முடிச்சுமாறி", என்ற சொற்றொடர்களை குடியரசு, திராவிடனில் எழுதிவந்தது அதற்குச்சான்று என்றும்சொல்லி, இப்படிப்பட்டவர்கள் தன்மானம் இன்னதென அறியுந் திறத்தினராஎனக்கட்டுரையாளர் அறிஞர்களை வினவுகிறார். நல்லவேளை சில ஆண்டுகளுக்குமுன் தோன்றியுள்ளது இவ்வியக்கம்எனச் சொல்லுகிறார். ஆகையால் மேலேசொன்ன மூன்று இழிசொற்றொடர்களும் அண்மையில் தோன்றியவை என்பதே அவரின்கருத்தாகும் "நீறில்லா நெற்றிபாழ்",, என்று தன் கொள்கைக்கு மாறான கொள்கை யுள்ளவர்களுடைய சிறந்த உறுப்பையேஇழிவுபடுத்திக்கூறும் முதுமொழி தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் பெருமையுடையது என்பதை அவர் ஒப்புக்கொள்வார். இதுபோன்ற இழிமொழிகள் எத்தனை உளஎன்பதை அவரே தேடிக்கணக்கிடட்டும். பிறர் மானத்தைக் கெடுக்கவழி காட்டினவர் யாரென அவரே சொல்லட்டும், அல்லது அவருடைய வினவுக்கு விடையை எதிர்பார்க்கும் அறிஞர்களைக் கேட்டுத்தெரிந்துகொள்ளட்டும். இழிசொல்கூறுவதை ஊக்கப்படுத்த இதை எடுத்துக்காட்டவில்லை, "பிறர்க்கு மரியாதையின்றிஒழுகுகிறவர்கள்பிறரால்அவமரியாதை அடைந்துவருதலை நாம் கண்கூடாகக்காண்கின்றோம்",எனக்கட்டுரையின் துவக்கத்தில் அவர்சொன்ன நியாயத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகுமா என்று இதைக்குறிப்பிடுகிறேன். சீர்காழிப் பார்ப்பனச் சிறுவர், தன் பாட்டனார் வயதுள்ளவர்கள், தன்னைப் போல் தாங்கள்கொண்ட கொள்கையிற் பற்றுடையவர்கள், மக்கள் அறிவிலும் நடையிலும் உயரவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் கைமாறு கருதாது உழைத்தவர்கள், அறிவில் தனக்கு எத்துணையும் பின்னடையாதவர்கள், அன்பில் தனக்கு எவ்வளவோ உயர்ந்தவர்கள், இப்படிப்பட்டவர்கள் தன்னுடைய கொள்கைக்கு இடையூறாயிருந்த காரணத்திற்காக, அவர்கள்மேல் மொழிந்த இழிமொழிகளைக்கேளுங்கள். 'புத்தரோடு பொறியில் சமணும்புறங்கூற', "குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும்" "புத்தர்சமண கழுக்கையர் "புத்தர் புறங்கூறிய புன்சமணர்", "தீய கருமம் சொல்லுஞ்சிறுபுன்றே சமணர் "குண்டமனர் துவர்க்கூறை கண்மெய்யிற் கொள்கையினார் புறங்கூற" என்பன போன்றனவாம். இவர் இவ்விழிமொழிகளைக் கோபத்தில் சொல்லிவிடவில்லை. ஒருமுறை இருமுறை தவறிச் சொன்னவையல்ல. கடவுளை வழிபடும் பதிகங்களில், "பூசுரன் ஞானசம்பந்தன்" நற்றமிழ்ஞானசம்பந்தன்", என்பனபோன்ற சொற்களால் தன்னைத் தானே வாய்கூசாது உயர்த்திக்கூறும் கடைசிப்பாவுக்கு முந்தியதில், தன்னின் மாறுபட்டவர்களைத் திரும்பத் திரும்ப வாயாரச்சொன்ன வசைமொழிகளாம் இவை. அவர்தான் அவருடைய வயதுக்கும் அப்பொழுதிருந்த நாட்டுநிலைமைக்கும் தகுந்தவாறு இவ்விழிமொழிகளைச் சொன்னாரென ஒதுக்கிவிட்டாலும், அக்காலத்துக்கழுவுக்குஅஞ்சிச் சைவர்களான மக்களுடைய பின்தோன்றலான நாமும் அவ்விழிமொழிகளைமனப்பாடம் பண்ணி, அன்பே சிவம் என்ற உரிமை கூறும் சிவவழிபாட்டில் நம்முன்னோர்களையும், கழுமரத்திற்கு மஞ்சாது தன் சமயத்தைவிடாத திடமன மக்களின் பின்தோன்றல்களாம் இப்பொழுதும் பழைய சமயத்தில் பற்றுடையோராய்த் திகழ்பவர்களையும், தூற்றப்பழக்கப்பட்டிருக்கிறோமென்றால், பிறர்மானம் அழிப்பதில் நாம் எவ்வளவு தேர்ந்தவர்கள்என்பது தெளிவாகும். தலைமுறைதலைமுறையாகக் கடவுள் வழிபாட்டிற்கு ஒத்தது என ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவழக்கம் எளிதில் நம்மைவிட்டு அகலாதுதான். ஒருகொள்கையுடையவர்கள் மாறுபட்ட கொள்கையுடையவர்கள் மானங்கெடும்படியானசொற்களை வெளியிடுவது தங்கள் மானக்கேட்டிற்கு வழிதேடிக்கொண்டதாகுமெனக் கட்டுரையாளர்உள்ளத்திற்பதிந்தது ஒரு நற்குறியேயாகும். சில ஆண்டுகட்கு முன் என்னுறவினர் ஒருவருடன் செட்டிநாட்டு மணவிருந்தொன்றிற்குப்போயிருந்தேன். எங்களுக்கும் சில பருத்தி நூல்காரர்களுக்கும் சேர்த்து ஒரு இடத்தில் சாப்

(9ம் பக்கம் பார்க்க)

# இழந்தகாதல்-பொன்விழா

(என். வி. என். திரட்டியது)

சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் 18-12-44 திங்களன்று, நகைச்சுவை அரசு N. S. K. நாடக சபையினரின் "இழந்த காதல்" என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தின் பொன் விழா (50-வது நாள்) வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமைவகித்தார். நாடகத்தில் சோமநாதம் பிள்ளையாக நடித்த தோழர் சந்தானம் அவர்கள் டாக்டர் அழகப்பா அவர்களை மேடைக்கு அழைத்துச்சென்று அவர் நாட்டிற்குச் செய்துவரும் பேருதவிகளையும், குறிப்பாகக் கல்வி வசதிக்குக் கொடுத்துள்ள நன்கொடைகளையும் குறிப்பிட்டு, தலைமைவகிக்க ஒப்புக்கொண்டதற்குக் கம்பனி சார்பாக நன்றிகூறினார். நகைச்சுவை அரசு N. S. K. அவர்கள் பலத்த கைதட்டுதலுக்கிடையே தலைவருக்குமலர் மாலை சூட்டி மகிழ்வித்தார்.

பின்னர் டாக்டர் அழகப்பா பார்-ட்-லா அவர்கள் சொற்பொழிவாற்றியதாவது:- உயர்திரு N. S. கிருஷ்ணன் அவர்களே! பெரியோர்களே! சகோதரிகளே! இன்று என்னை இவ்விழாவிற்குத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்காக எனது நன்றியை முதன்முதலாக உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். சினிமாத் தொழிலினால் நாடகக்கலை சீர்குலைந்து விட்டதென்று கடந்த 5-ஆண்டுகளாக மிகத் தீவிரமாகப் பேசப்பட்டு வந்துள்ளதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். ஆனால், அந்த எண்ணம்பொய்யாகி விட்டதை இன்று நாம் காண்கிறோம். எதன்மூலமாக? நாடகக் கலைவளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துவரும் முக்கியஸ்தர்களானநமது N. S. K. போன்றவர்களின் தீவிர ஒத்துழைப்பினாலும்ஆர்வத்தினாலுமே யாகும்.

நாடகத் தமிழ் என்று தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். முன்பெல்லாம் நாடகத்தில் அந்த முறையைத்தான் கடைப்பிடித்து வந்தனர். அது இப்போது வெற்றிபெறாது. உதாரணமாக இன்றைய நாடகத்தில் சோமநாதம்பிள்ளை, தனது குமாரன் ஜெயபால், தவறான வழியில் நடப்பதையுணர்ந்து கோபித்துப் பேசும் சந்தர்ப்பத்தில், நமது இல்லங்களில் நடைமுறையில் எவ்விதம் பேசுவோமோ அதே போன்று எளிய நடையில், ஆனால் உணர்ச்சியுடன் நடித்துப்பேசினார். நீங்களும் அதை அனுபவிக்க முடிந்தது. முன்பெல்லாம் இப்பேற்பட்ட, தகப்பன் தன் பிள்ளையைக் கோபிக்கும் கட்டங்களில் என் மைந்தனே, நீ தவறாக நடப்பது உசிதமாகுமா? என்று தனித்தமிழ் முறையில்பேசுவார்கள். அது மக்களுக்கு உணர்ச்சிதராது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயமாகும். ஆகவே திரு N. S. K. அவர்கள் கம்பனியில் இவ்வித மாறுதலை எற்படுத்தியிருப்பது தனி விசேஷமாகும்.

திரு N. S. K. அவர்கள் என்னிடம் தனியாகப்பேசின சமயத்தில் கலை வளரவேண்டுமானால், நடிகர்களுக்குக்கவலையிருக்கக்கூடாதென்று குறிப்பிட்டார். நான், அவர் இக்கம்பெனியின் நிர்வாகத்தைநடத்தும் முறையைக்கேள்விப்பட்டதுடன், இன்று நேரிலும் கண்டேன். எந்தவிதத்திலும் நடிகர்களுக்குக் குறைவு ஏற்படக்கூடாது, அவர்கள் நல்வாழ்வு நடத்தவேண்டும் என்று நமது N. S. K. அவர்களுக்கிருக்கும் பரந்த நோக்கம் கட்டாயம் வெற்றிபெற்றே தீரும். எனது நன்றியைத்திரு N.S. கிருஷ்ணன் அவர்கட்குத் தெரிவித்துக்கொண்டு எனது பேச்சைமுடித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இசைமன்னர் M.K. தியாகராசபாகவதர், ஜுபிடர் பிக்சர்ஸ், உமாபிக்சர்ஸ், கிருஷ்ணாபிலிம் வேணு செட்டியார், எ. எஸ். வி. சாமி, வீகம்லி சபில்தாஸ் கம்பெனி R. M. J, கோபால் கம்பெனி ஆகியவர்களால் எல்லா நடிகர்களுக்கும், தங்கச்சங்கிலிகள், வைர மோதிரங்கள், வெள்ளிக்கோப்பைகள், மெடல்கள் பரிசளிக்கப்பட்டன.

கடைசியாக நகைச்சுவை அரசு N.S. கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:—

தலைவரவர்களே, பெரியோர்களே, இன்று நடைப்பெற்ற இழந்த காதல் என்னும் நாடகம், இதற்கு முன்பு அதாவது பழைய மங்களபாலகான சபையினரால் நடத்தப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். 7 அல்லது 8 நாட்களுக்குமேல் நடக்கவில்லை. ஆனால், இன்று அதே நடிகர்களாலும், அதே மியூசிக் செட்டுகளாலும், 8 வாரமாக நடத்தப்பட்டுப் பொன்விழாவும் இன்று நடைபெறுகிறது. இதற்குக் காரணம் என்ன? சோறும் கறியும் மட்டுமிருந்தால் சுகமாகச் சாப்பிடமுடியுமா? அதற்கு இலையும் இருந்தால்தான் முடியும். அதேபோன்று முன்பு இக்கம்பனியில் சோறும் குழம்பும் மட்டுமிருந்தது, இலை இல்லை, இன்று இலை கிடைத்திருக்கிறது. அதனால்தான் 50 நாட்களாக இன்னும் அதற்குமேலாக ஒவ்வொரு நாடகத்தையும் நடத்த முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலையென்று குறிப்பிட்டேனே, அந்த இலைக்குச்சமானமானவர், என்னைத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன் என்று நீங்கள் இதுவரை நம்பியிருந்தீர்கள் அல்லவா, அதுதான் கிடையாது, இப்போது சொல்லப்போகிறேன் அந்த இலை யார் என்பதை. அந்த இலைதான் நமது ஓவியக் கலாவல்லவரான ஆர்டிஸ்ட் மாதவன் அவர்கள். அவரது கைத்திறமைதான் முன்பெல்லாம் 1 வாரம் கூடச்சரியாக நடத்தமுடியாத இக்கம்பனியின் நாடகங்கள் இன்று 10 வாரங்கள்கூடநடத்துவோம் என்ற மாறுதலுக்கு எற்பட்டுவிட்டது. அவரைத்தான் குறிப்பிட்டேன் இலையென்று. யான் என்னைப்பற்றி எப்போதும் பிரமாதமாக நினைத்துக்கொள்வதில்லையென்பதையும் ஞாபக மூட்டுகிறேன், அதற்காகவுமல்ல இக்கம்பனியின் நிர்வாகத்தை யானேற்றுக்கொண்டது.

சாதாரணமாக இலையென்று சொன்னால் சாப்பாடு முடிந்ததும் எங்கேயோ போய்விடும், ஆனால் இந்த இலைவெள்ளியால் செய்யப்பட்டது. அதை நாம் சாப்பிட்டானவுடன் பத்திரமாக வைப்பதுபோன்று, ஆர்டிஸ்ட் மாதவன் அவர்களின் கைத்திறமை நமக்கு எப்போதும் பயன் தந்து, நாடகக்கலையை வளர்த்து வருமென்பதையும் ஞாபகமூட்டுகிறேன் என்று கூறி ஆர்டிஸ்ட் மாதவன் அவர்கட்குத் தங்கச்சங்கிலி ஒன்றும், அவருக்குத்துணையாயிருந்துவரும் தோழர் தர்மராசன் அவர்கட்கு மோதிரம் ஒன்றும் பரிசளித்தார்.

மீண்டும் தொடர்ந்து N. S. K. பேசியதாவது:— போனமச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே என்று கூறுவார்களே, அதுபோலாகி வருகிறது என் விஷயமும். அதாவது யான் சிறுவயதில் நாடகக்கம்பனியில் சேர்ந்து நடித்துவந்ததன்பிறகு சினிமாத்துறையில் ஈடுபட்டு மீண்டும் அன்றைய நிலையில் நாடகக்கம்பனியில் ஈடுபட்டுள்ளேன். நாடகத்தை விட்டுச்சென்ற யான், மீண்டும்நாடகமேடைக்குவந்துள்ளேன், எனவேபோனமச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடேயென்று கூறுவது சரிதானே. ஒட்டகம் இடம் பெற்ற கதைமாதிரி இன்று யான் பிரவேசித்திருப்பது. ஆனால், ஒட்டகம்இடம் பெற்றுவிட்டால் இடம் கொடுத்தவரையே டேராவிற்குள்ளிருந்து வெளியே ஓட்டிவிடும். நான் அப்படி நுழையவில்லை. நான் ஒட்டகம்போன்று தலையை நீட்டியிருக்கிறேன் இன்னம் கூடிய சீக்கிரம் முழுநேரமும் நாடகக்கலையின் வளர்ச்சிக்கே உழைக்கவும் போகிறேன். ஆனால் எந்த மனப்பான்மையோடு? ஒட்டகத்தின் மனப்பான்மைப் போலவா, இல்லை இல்லை. புகுந்த டேராவை இன்னம் விரிவுபடுத்திப்பலர் இருக்க இடம்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 24—12—44 ஞாயிறு

# தேம்பும் தாயகம்

நாட்டுமக்களின் நல்வாழ்க்கைக்காக நாளும் பாடுபட்டுழைக்கும் நல்லோர்க்கெல்லாம் நாயகமாக விளங்கிய நமது தளபதி, தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார். ஒருதிங்கள் நோயுடன் போராடினார், திராவிடத்தைப்பிடித்துக்கொண்டுள்ள ஆரியமெனும் நோயை நீக்க வாழ்நாள் முழுதும் உழைத்துவந்த வீரர். நாயகம் நற்பண்புகளின் நாயகம்! கட்சிப்பற்றிலே அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். கரையான்களாகவும் காளான்களாகவும், காலத்திற்கேற்ற கோலமிருப்பவராகவும் பலர் கட்சியிலே இருந்தனர். அந்தக்கறைகள் மறையுமளவு, மணிஒளி என விளங்கினார் மாண்புடைய அன்பர். அவர், துரைத்தனத்திலே வேலைபார்த்து, ஓய்வுபெற்றார், சில ஆண்டுகட்கு முன்பு; ஆனால் ஓய்வைப் பொதுவாழ்க்கைக்கு அர்ப்பணித்தார். எளியவாழ்க்கை, இன்சொல், குளிர் முகம், மலர்ந்து மறைந்து மீண்டும் மலரும் அழகியபுன்னகையுடன், அவர் காட்சியாக விளங்கினார், தமிழகம் கண்குளிரக்கண்டது, பெருமிதத்துடன் அவருடன் உறவு கொண்டது, அவருடைய பயனுள்ள மொழிகேட்டுப் பண்பட்டு வந்தது. கலம் கரைசேருமுன், காவலரில் ஒருவர் மறைந்தார், கலத்திலே உள்ளோரின் கண்ணீர் கடல் வெள்ளத்திலேகலந்தது. என்செய்வது, திராவிடம் பெற்ற தீரர், ஆரியத்தோடு தொடுத்த போர் முடியாமுன்னம், மறைந்தார், மனமுடைந்துள்ள நாம், அவர்வழி சென்று, அவர் ஆற்றிவந்த அரும்பணியினைத் தொடர்ந்து நடத்தி, அவருக்கு நன்றி செலுத்துபவராக வேண்டும் என்பதையன்றி, வேறென்ன இருக்கிறது.

தளர்பருவமுற்றபோதும், நாயகம், தமது தமிழகப்பண்புக்கேற்பப், பணிபுரிந்தேவந்தார், அஞ்சா நெஞ்சுடன். பணிபுரிந்தார் என்றால், பாராளும் இடம் பெறுவதற்காகச் சர்க்கார் முன் தவங்கிடக்கும் பணியல்ல, பழமையுடன் போராடினார், தமிழர் தமது தரணியை ஆளும் தகுதியுடையோராக வேண்டுமென்ற நோக்கத்துடன் போராடினார். நமது கொள்கைகளைக்கண்டு சிலர்மிரண்டதுண்டு, சிலர் தலைவரைத்தாக்கியதுண்டு, மற்றுஞ் சிலர் தலைவரைத்தாக்க இது ஓர்சாக்கு எனக்கொண்டதுமுண்டு, நமது நாயகம், கொள்கை தீவிரமானது கண்டு களிகொண்டு, சுயமரியாதை ஆர்வத்தை வேண்டுமட்டும் மொண்டுஉண்டு, பணிபுரிந்தார்.

“பருந்தி அம்மையார்களின்” பழைய வழக்கங்கள்பற்றிப் பல வருட அனுபவத்துடன் அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டவர்கள், தெளிவும் தீரமும் பெற்றனர். இவ்விதழில் பிறிதோரிடத்திலே, நாயகம் நல்கிய நன்மொழிகள் என்ற தலைப்பிலும், சுயமரியாதை நீதி என்ற தலைப்பிலும், அவருடைய பொன்மொழிகளில் ஒரு சிறுபகுதியைவெளியிட்டிருக்கிறோம், ஆழ்ந்தகருத்தும், அறிவின்திறமும், திராவிடத்தீரமும், அவர் மொழியிலே குழைத்திருப்பதைக் காணலாம். எப்படிப்பட்ட நெஞ்சழுத்தமும் நேர்மையில் நாட்டமும், பணியில் ஆர்வமும், பண்பில் பயிற்சியும் பெற்றிருந்தவரை நாம் இழந்துவிட்டோம், என்பது, அவர் உரையிலிருந்து அறிகிறோம், அறிந்ததும் நமது ஆறுத்துயரம், அனலென நம்மை வாட்டிடக் காண்கிறோம், வதைகிறோம், விம்முகிறோம், வேறென் செய்வோம்.

மாநாட்டு மலர் மாலைக்கும்; சட்டசபை ஸ்தானங்கட்கும், அதிகாரிகளின் புன்சிரிப்புக்கும், கட்சிப்பிரவேசம் ஒரு நுழைவழி என்று கொண்ட சிறுமதியினராகப்பலர் இருந்தநாளிலே உழைத்துஉடல் மெலிந்திருந்த உண்மை ஊழியர், தமது இனமுன்னேற்றங்காணமட்டுமே கட்சிப்பணி ஓர் வாய்ப்பு எனக்கொண்டிருந்தார், தொண்டு புரிந்தார், அந்தோ மறைந்தார், அரும்பணி புரிந்துவந்த அண்ணல்.

இந்திஎதிர்ப்புக்காலத்திலே, சொல்லம்பு பல விட்டுச் சோபிதமாக உலவி, அறிக்கைகளை ஏவித்தொண்டர்களைக் கூவி அழைத்துக் கூண்டுக்குள் இருக்கச் செய்துவிட்டுக் கொலுவீற்றிருந்தகொள்கைமறந்த கோமான்கள் கூட்டத்திலே இருந்தவரல்ல, நம்மைக் கோவெனக் கதறவிட்டுக் குளிர்ந்துபோன திராவிடத்திருவிளக்கனையார். சிறைக்கஞ்சாச் சிங்கமானார், தங்கக்குண முடையார்! இந்தி எதிர்ப்புக்கே தமது இல்லத்தை ஓர் பாசறையாக்கினார். அவருடைய புன்முறுவலே, எண்ணற்ற தொண்டர்களுக்கு இன்னமுதாயிற்று, சிறைபுக நேருமோ என்ற சிந்தனை எழுந்தகாலை சிரித்தமுகத்துடன், ஆரிய ஆட்சியினும் அவதி தரும் சிறைமேல் என்று ஆண்மையுடன் பேசினார். அரசாங்கம் ஓலை விட்டதும், காலை முன்வைத்துச் சிறைச்சாலைக்குச் சென்றார், சென்றபின் கொள்கையைக் கொன்ற சீலர்கள் போல, மன்னிப்புக் கோரும் மணிகளாகாது, அந்தக் கிழவர், சுகம் வெளியே இருக்க, சுற்றம் சோர்ந்திருக்க, குடும்பம் களிப்பூட்டக்காத்திருக்க, அவைகளை மறந்து, மனதுட்கொள்ள மறுத்து, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற பொன்மொழிப் புலவரின் பாட்டினை விளக்கும் நடமாடும் நாயகமாகச் சிறைச்சாலையிலே இருந்தார், செந்தமிழரின் வீரத்தை இகழ்ந்தாரில்லை. புலிஎனப் பேசி எலிஎன ஓடிய புன்மதியினர் போலன்றி, மெள்ளப்பேசிக் கள்ளச்சிந்தனை ஏதுமின்றிக் கஷ்டநஷ்டத்தைக் கலங்காது ஏற்றுக்கொண்டார், நமது மனதைக்கொள்ளை கொண்டார், நமது கண்களைக் குளமாக்கி மறைந்தார், குணக்குன்று.

தீவிரமாகப்பேசுவதிலே தீரர் என்ற பெயரெடுத்தாகிவிட்டது, அந்த அரங்கிலே ஆனந்த நடனம்புரிந்து, அதற்கான ஆதரவுபெற்றுவிட்டது, இனிவேறு ஆட்விடம் தேடுவோம், பாடலழகராகுவோம், பரமன்பதத்தைநாடுவோம், பழனிப்பக்தருடன் கூடுவோம், பக்திப்பஞ்சாமிருதத்தைப்பருகுவோம், பாமாலை புனைந்து பூமான்களை அடைந்து, பெம்மான்அருள் பெற்ற சீமான் எனத்திகழ்வோம்என்று துணிந்து தூர்த்தராகும் தூயமணிகளைக் கண்டு, கண்புண்ணாகவில்லையே இக்காட்சியைக்காண நேரிடும் என்று கவலையுற்றபோதெல்லாம், செச்சே! இந்நாவாணிபர்கள் வேளைக்கோர்வேடமிடுவர், இவர்பற்றிச் சிந்தனையும் சோகமும்ஏன், நரிக்குணம் கொண்டவரின் நடவடிக்கையைக்கருதற்க, நாயகத்தை நோக்கு! அவருடைய நடுங்கா நாவையும், ஒடுங்கா உள்ளத்தையும், பதவிப்பாசத்திலே சிக்காத பான்மையையும் கண்டு களி! பெருமை கொள்! இதோ என் தமிழர்! என்றுமார் தட்டு!—என்று நமக்கெல்லாம் கூறுவது போலிருந்துவந்தது, நாயகத்தின் குறுநகையும், கண்களிலே தோன்றிடும் சிறு ஒளியும், பெரும்பணியும். ஆம்! அத்தகைய வீரரைத்தான் இழந்துவிட்டோம். அவர், பலகாலம் நமக்காகப்பாடுபட்டுத் தமதுபங்குக்கு மேலாகவே உழைத்துவிட்டுத்தான் நம்மைவிட்டுப்பிரிந்திருக்கிறார். இனி அவரிடம் இவ்வளவுபெற்ற நாம், அவருடைய பெயரைமறவாது, குறியை மறவாது, அவர் பணிவழிநின்று உழைப்பதன்றி, மறைந்தவருக்குக் காட்டக்கூடிய மரியாதை வேறென்ன! அறிவுக்கண் இழந்தே நமதுவீரஇனம், வீழ்ச்சியுற்றது என்பதைஉணர்ந்த நாயகம், குலசேகரன்பட்டினத்திலே கல்விச்சாலை, நிறுவி அதனைக் கண்ணிமைபோல்காத்து வந்தார். அவருடைய அறிவுஇல்லத்தைத் திராவிடர் தமது ஆதரவுக்கு உரிமை பெற்ற குழந்தைகளாகக்கொண்டு, அன்பை அள்ளி ஊட்டி வளர்க்கவேண்டும். நமது நீங்காக்கடமை அது. தூங்கும்உள்ளம்படைத்தோராக இராமல், துயர்நீக்க அயராதுஉழைத்த நாயகத்தின் நற்பண்புகளின் சின்னங்களாக நாம் விளங்குவோமாக. நாயகம்நமக்காகவாழ்ந்தார், உழைத்தார். நம்மை நினைத்தவண்ணமே உயிர் நீத்தார் நாமும் உயிர்நீங்குமுன், நாயகம் நல்கிய நன்மொழி வழிநடந்து, நாங்களும் நாயகத்தின்நல்லினமக்களே என்று உவகையுடன் உரிமையுடன் உரைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு, உரிமைப் போரிலே ஊக்கம்கொண்டு உழைப்போ

(8ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

மாறுவேடமணிந்து, காடுமேடு சிற்றூர் கிராமம் பலகடந்து, சென்றுகொண்டிருந்த பார்த்திபனைப்பின் தொடர்ந்து சென்றால், குமார் ஒளிந்திருக்கும் இடமும், அங்குநடத்தப்படும் மர்மமும் தெரிந்துவிடும் என்ற நோக்கத்துடனேயே, துப்பறியும் பிரமநாயகம், அவனைப் பின்தொடர்ந்தார், அவருடைய இரகசிய ஏற்பாட்டின்படியேதான், அவருடைய ஆள்ஒருவன் சிறைக்காவலனாக நடித்துச் சிறைசென்று, அங்குபார்த்திபனின் நண்பனாகநடித்து வெளியே அனுப்பிவிட்டான். விடுதலைகிடைத்துவிட்டது என்றுமகிழ்ந்த பார்த்திபனுக்குத்தெரியாது, தனக்குக்கிடைத்த விடுதலையே பிறகு கெடுதலாகமுடியும் என்பது. பார்த்திபனின் மாறுவேடங்கள், அத்தகைய வேடங்கள் அணிவதிலே பயிற்சிபெற்ற பிரமநாயகத்துக்குத் தெரியாமற்போகவில்லை. பிரமநாயகத்தின் மாறுவேடங்களை அறியும்அளவு அறிவு அந்தத்துறையிலே பார்த்திபனுக்குக் கிடையாது. எனவே ஒரு நாள் ஆண்டிவேடம்அணிந்திருந்தபார்த்திபனை, அதேபோலவேடமிட்டுப் பிரமநாயகம் சந்தித்தபோது, பார்த்திபன் ஏமாற்றமடைந்தான்.

"சதாசிவம்! சாது எங்கே போவது?" என்று ஆண்டிமொழிபேசினார் பிரமநாயகம்.

"எங்கேபோனால் உனக்கென்ன?" என்று பார்த்திபன் பழைய முடுக்குடன் பதில்சொன்னான்.

"போகுமிடம்பாழே! புறப்படுமிடமும் பாழே! எவ்விடமும் பாழேகாண் ஏகம்பநாதனே" என்று பிரமநாயகம் ஆண்டிக்கோலத்திற்கேற்ற தத்துவம்பேசிவிட்டு, "சாமிகோவிக்கப்படாது. இந்தக்கட்டை இந்தப்பக்கத்துக்குப்புதிசு. இருப்பிடம் யாழ்ப்பாணம், போகுமிடம்என்றுஒன்றுமில்லை. துணைதேடிடும் இக்கட்டைக்குக் கொஞ்சம் வழிகாட்டவேண்டும்" என்று கெஞ்சினார், உண்மை ஆண்டியாகஇருந்தால்தானே, பார்த்திபனுக்கு, உடன்வர விரும்பும் ஆண்டிக்கு ஏற்றவிதமாகப் பேசமுடியும். அவன் உள்ளத்திலே எவ்வளவோவேதனை. இந்தநேரத்திலேஇவன் யாரோ ஓர் சனிக்காரன் என்ற சலிப்பு. அதனால், "ஆண்டியாம், ஆண்டி! தடித்தாண்டவராயன்போலிருந்துகொண்டு, காவிஎன்ன உனக்கு! கட்டைவண்டிஇழுத்தாலும் கால் வயிறுநிரம்புமே" என்று ஏசினான். "சாமிபேசும் பாஷையிலே, பல ஆசாமிகள்பேசுவதை இந்தக்கட்டைகேட்டதுண்டு. ஆனால் ஆண்டிக்கு ஏன் இந்த அதிகாரப்பேச்சு? ஆண்டிக்கு ஆண்டி ஆதரவு, ஆண்டிகளுக்கு ஆண்டவன் ஆதரவு என்று இந்தக்கட்டைசொல்லித்தானா சாமிக்குத் தெரியவேண்டும்" என்று கேட்டுவிட்டு, அருகேநெருங்கி, "சாமிக்குக்காலையிலே புகைகிடைக்கவில்லையோ? இந்தக்கட்டையிடம் கால்பலம்இருக்கிறது, சாமிக்குத் தேவையோ" என்றுகேட்டான், கொஞ்சம்கஞ்சாவைக்காட்டியபடி. பார்த்திபன் பரங்கிகள்தயாரித்தபக்குவமானபோதைகளைச்சாப்பிட்டுப்பழக்கமானவனேதவிர, பண்டாரங்களின் பண்டமான கஞ்சாவின் பழக்கம்கொண்டவனல்ல. ஆகவே கால்பலத்தைக் கண்டதும்பார்த்ததும் கடுங்கோபம் அவனுக்கு. அந்தக்கள்ளி பார்வதிமட்டும், இப்படி அவதிவரப்படும்படிசெய்யாதிருந்தால்; இதேநேரத்திலே, பீரோவைத்திறந்தால் பூபோட்டகிளாசும், புதுலேபில் ஒட்டிய பாட்டில்களும், எப்படிக்காட்சிஅளித்திருக்கும். அந்த ரசம்பருகிய நமக்கு இந்த ஆண்டிகஞ்சாத்தருகிறானேஎன்றுஎண்ணி ஏங்கினான், அந்த ஏக்கத்தைப்போக்கிக்கொள்ள,

"அடி! பார்வதி! உன்னைநான் என்னபாடுபடுத்துகிறேன் பார்!" என்று உரக்கக்கூவினான், சற்றுத்தொலைவிலே பார்வதி நிற்பதுபோல!

துப்பறியும் ஆண்டி தொடங்கினான் ஆண்டிப்பேச்சை.

"ஆமாம் சாமி! அந்தப்பார்வதியால் வந்தவினைதான் இவ்வளவும்" என்றான். பார்த்திபனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோலாகிவிட்டது. "எந்தப்பார்வதி? என்னசெய்தாள்? என்ன உளறுகிறாய்" என்று கேட்டான்.

"சாமி, இப்போது அலைவதும் பார்வதியால்தான். இந்தக் கட்டையின் வாழ்க்கை கெட்டதும் பார்வதியினாலேதான்" என்று பிரமநாயகம் சொன்னார். பார்த்திபனுக்குக் கொஞ்சம் பயம்பிறந்தது. பயத்தை மறைக்கக்கோபத்தைத் துணைகொண்டு, 'ஆண்டிப்பயலே! அர்த்தமற்றபேச்சுப்பேசாதே. நீஎந்தப்பார்வதியைப்பற்றி இப்படிப்பேசுகிறாய்' என்று கேட்டான்.

"சாமி இந்தக்கட்டையைச் சோதிக்குது. இந்தக்கட்டையும் ஞானவெட்டியான் முதற்கொண்டு தவநீபம் வரை படித்தகட்டைதான்" என்று கூறிப்பல்லிளித்தார். அவ்வளவு பற்களையும் இரண்டேஅறைகளில் உதிர்த்துவிட எண்ணினான் பார்த்திபன், கோபம் அவ்வளவாகிவிட்டது அவனுக்கு. ஆண்டியின் கரத்தைப்பிடித்து முறித்து, "என்னடாபேசுகிறாய்! சொல்வதைச் சரியாகச்சொல்! இல்லாவிட்டால் தோலை உரித்துவிடுவேன்!" என்று மிரட்டினான்பார்த்திபன். பிரமநாயகம் கோபங்கொள்ளவில்லை. "சாமி, நிச்சயமாகஎன்னைச்சோதிக்குது. சாமி இப்போது இவ்வளவு தொலைவு அலைவதுஎவர்காக?சிவானுக்கிரகம்பெற. அந்தசிவானுக்கிரகம் ஏன் இன்னமும் கிடைக்கவில்லை சிவனுக்கு மனம்இங்கே வரவில்லை. ஏன்மனம் வரவில்லை? சிவனுக்குவேறே இடத்திலே மனம்இலயித்திருக்கிறது. எங்கே இலயித்திருக்கிறது? பார்வதி தேவியாரிடம்! ஆகவே பார்வதி தேவியாரின் பாசத்தால் பரமசிவன் பக்தர்களாகிய நம்மைப்பற்றிப்பராமுகமாக இருக்கிறார். இதனைத்தான் சாமி நினைத்துக்கொண்டு, அடி! பார்வதி உன்னை என்னபாடுபடுத்துகிறேன் பார், என்று பேசினது. இதுஇந்தக்கட்டைக்குத்தெரியவில்லையா? இந்தக்கட்டை, மரக்கட்டையில்லை, மகாதேவன் அருளால் பிறந்த மனிதக்கட்டை!" என்று பிரமநாயகம் பேசினார், பரம்பரை ஆண்டிபோல. கோபம்போய்விட்டது பார்த்திபனுக்கு, சிரிப்புப்பொங்கிற்று. இப்படிப்பட்டபேர்வழிகளுடன் சேரவேண்டி நேரிட்டதே என்று மறுவிநாடி மனக்கஷ்டம் ஏற்பட்டது. ஆண்டியை நோக்கிப் பார்த்திபன் சாந்தமாகவே பேசலானான்.

"எத்தனை வருஷமாக ஆண்டியாக இருக்கிறாய்?"

"வருஷக்கணக்கையா சாமிகேட்குது; நல்லகேள்வி. தலைமுறைக் கணக்கைக் கேட்கவேண்டும் சாமி, நாலு தலைமுறையாக ஆண்டிகள் நமது குடும்பம்"

"நல்லது உன்பெயர் என்ன?"

"இந்தக்கட்டைக்கு அன்னாபிஷேக ஆண்டி என்று பெயர்"

"சீ! உன்பழைய பெயர்?"

"சாமி, அதைக்கேட்குதா! இந்தக்கட்டைக்கு அப்பன் வைத்தபெயர் சுப்பன்"

"என்னென்ன வேலை தெரியும்?"

'ஆண்டிவேலைகளா? பழையவேலைகளைக் கேட்குதா சாமி"

"பழைய வேலைகளைத்தான் கேட்கிறேன்"

"பழைய வேலைகளை இந்தக்கட்டை இப்போது செய்வதில்லை. இருந்தால் என்ன! சாமிகேட்கும்போது சொல்லத்தான் வேண்டும்."

"சந்தடி செய்யாமல் அடித்த பந்து மேலே தாவுவதுபோலச் சுவரைத் தாண்டிக் குதிக்கமுடியும், சாவியில்லா

([illegible]ம் பக்கம் பார்க்க)

## இழந்தகாதல்-பொன்விழா

5-ம் பக்கத் தொடர்ச்சி.

பெறச்செய்யும் நோக்கத்தோடே ஒழிய சுயநலநோக்கம் கொண்டல்ல, நான்மீண்டும் நாடகத்தொழிலில் ஈடுபட உத்தேசித்திருப்பது.

மற்றொரு காரணமும் சொல்லுகிறேன்கேளுங்கள். ஈரோட்டில் மாநாடு ஒன்று நடந்தது. அதற்கு என்னை அழைத்தார்கள். நான் ஒரு பெரியபேச்சாளியல்ல, அந்த மாநாட்டில் ஒட்டகம் போன்று மெதுவாகத்தலையை நுழைத்தேன். அப்போது சொன்னேன் கலை வளரவேண்டுமானால், நடிகர்களுக்குக் கவலையிருக்கக்கூடாதென்று, உங்களுக்குஒன்றுகூறவிரும்புகிறேன். நாடகக்கம்பனியிலிருந்துவிட்டு விலகும் நடிகன்வேறெந்தத் தொழிலுக்காவது லாயக்குடையவனாக விளங்குகின்றானென்றால்அதுதான்கிடையாது, அதோடு அவனது வாழ்நாட்கள் சீர்குலைந்துபோகின்றன. அந்த நிலைமை மாறவேண்டுமென்று யான்சொன்னதற்குச் சிலர் என்மீது வருத்தப்பட்டார்கள். சில முதலாளிகள் யான்சொன்னதை அநாவசியமாகக்கூடக்கருதினர். அதுமட்டுமல்ல,இன்னொன்றுமிருக்கிறது. சாதாரணமாக நான் நாடகத்திலிருந்த காலங்களில் இம்மாதிரி விழாக்கள்நடந்தால் பரிசுகள்யாருக்கு வழங்கப்படும் தெரியுமா? திறமையாகநடிக்கும் நடிகர்களுக்கல்ல, அதற்குக் கொஞ்சமேனும் சம்பந்தமற்ற முதலாளிகளுக்குத்தான், தங்கக்கூஜா, வெள்ளித்தடி, பித்தளை அண்டா, வைரகண்டி இப்படியாகப் பெரியசன்மானங்கள், பாபம் அந்தச்சமயத்தில் நடிகர்களின் மனம் எவ்வளவு வேதனைப்படும். ஒருசிறு மோதிரங்கூட அவனுக்குவராது. பொது ஜனங்களுக்கு என்னமோ நடிகர்களுக்குப் பரிசு கொடுக்கவேண்டுமென்ற எண்ணமிருக்கும். ஆனால் கம்பனிமுதலாளி நிபந்தனை அதற்கு நேர்விரோதமாயிருக்கும்.

அந்த நிலைமையை நான் இன்றைய விழாவில் இக்கம்பனியில் தலைவனாக மாற்றினேன். நீங்கள் கண்ணாரக்கண்டீர்கள், பல ஆயிரக்கணக்கான பரிசுகளை நடிகர்கட்கே வழங்குமாறுசெய்ததை. இதையே இனியாகிலும் மற்றவர்களும் செய்யவேணுமாய்மிகவும்வேண்டி எதிர்பார்க்கிறேன்.

அதுமாத்திரமா, நடிகர்களுக்கு, (Fund) நிதி ஏற்படுத்தவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதையும்ஈரோடு மாநாட்டில் சொன்னேன். செவிசாய்த்தார்களா, இல்லை. அதையும் இக்கம்பனியில் உங்களின் ஆதரவாலும், ஒத்துழைப்பினாலும்செய்ய முன்வந்துள்ளேன். ஆகவே, எப்படி ஒட்டகம்தலைநுழைத்துப் பின்னர் உடல் முழுவதையும் நுழைத்துக்கொண்டதோ அதேபோன்று ஈரோடு மாநாட்டில் நான் நாடகக்கலைவளர்ச்சி சம்பந்தமாகப்பேசினேன்; இன்று என்னால் முடிந்தளவு அத்திட்டங்களை நிறைவேற்றியும்வருகிறேன். இன்னும் தீவிரமாக உழைக்கவும் முன்வரப்போகிறேன்.

என்னுடைய எண்ணமெல்லாம், நடிகர்கள் எக்காரணங்கொண்டும் ஒருகம்பனியிலிருந்து விலகும்போது நடைப்பிணமாகஆகாமல் அவனது மற்றவாழ்நாட்களில் கவலையற்று வாழவேண்டுமென்பதேஎனதுபேரவா, அதேபோன்று மற்றக்கம்பனியாளர்களும் செய்துவரவேண்டுமென்பதோடு, செய்தேவரப்போகிறார்கள் என்ற நம்பிக்கையும்எனக்குண்டு.

ஆகவே, இன்னம்அதிகமாக யான்பேச இஷ்டப்படவில்லை. இன்று தலைமை வகித்துச்சிறப்பாகப் பொன்விழாவை நடத்திக்கொடுத்த நமது வள்ளல் அழகப்பருக்கு எனதுசார்பாகவும். உங்கள் சார்பாகவும், கம்பனியின் சார்பாகவும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, எங்களது அழைப்பிற்கிணங்கி விஜயம்செய்திருக்கும் சென்னை நகரிலுள்ள முக்கியஸ்தர்கட்கும், எனது சிநேகிதர்கட்கும், மற்றும் ஏராளமாகத் தினசரிவந்து ஆதரவுகொடுத்துவரும்சென்னைவாசிகளுக்கும் எனது மனமார்ந்த பெரிய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பின்னர் நாடகம்தொடர்ந்து நடைபெற்றுப் பொன்விழா காலை 1-45 மணிக்கு இனிது முடிவுற்றது.

---

## சி. டி. நாயகம் மறைவு.

தோழர் சி. டி. நாயகம் அவர்கள் ஒரு மாத காலமாய் நோய்வாய்ப்பட்டிருந்து அவருடைய சொந்த ஊராகிய குலசேகரப்பட்டினத்தில் 66-வது வயதில் 13-ந் தேதி முடிவெய்தினர் என்கின்ற செய்தியைக்கேட்ட தமிழ்மக்களில் துக்கப்படாதவர் எவருமிருக்கமாட்டார். நாயகம் அவர்கள் கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்ட்ராக இருந்துரிட்டயர் ஆனவர், சட்டசபை மெம்பராயும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக்கழக உறுப்பினராயும், தாலுகா தேசீயப் போர்டின் அமைப்பாளராயும், திருநெல்வேலித் தென்னிந்திய பாங்க் டைரக்டராயும் இருந்துவந்தார் என்பதோடு 40 வருடகாலமாக இருந்துவரும் தாயம்மாள் பெண்பாடசாலைக்கும், சென்னை தியாகராய நகரில் இருந்துவரும் எலிமெண்டரி அண்டு செக்கண்டரி பாடசாலைகளுக்கு காரியதரிசியாகவும், நிர்வாகியாகவும் இருந்துவந்தவர். அவர் பதவியிலிருக்கும்போது திராவிட மக்களுடைய நலனையே குறியாகக்கொண்டு அதற்காகத் தன்னாலானதை எல்லாம் செய்தவர். தனது சொத்துக்களை எல்லாம் பெரிதும் மேற்கண்ட பள்ளிக்கூடங்களின் நலனுக்காகவே தர்மம்செய்தவர். வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்தவர். அவருக்கு இரண்டுமகனும், இரண்டு பெண்களும் இருந்துவருவதோடு யாவரும் படித்துப்பட்டம்பெற்று உத்தியோகங்களில் இருக்கிறார்கள். மனைவியாரும் இருக்கிறார்கள்.

## தேம்பும் தாயகம்

6ம் பக்கத் தொடர்ச்சி.

மாக. நாயகத்தை இழந்த தாயகம்தேம்புகிறது, தேம்பியவண்ணமே, தலைவனை இழந்துதவிக்கும், அம்மைக்கும் தந்தையைஇழந்துதவிக்கும் மக்கட்கும், உற்றார் உறவினருக்கும், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.மீண்டும் தேம்புகிறது! காஞ்சியில் ரேஷன்.

19-12-44ந்தேதி முனிசிபல் கவுன்சிலர்தோழர்முனியப்பமுதலியார் தலைமையில், காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டையில் நடைபெற்ற கூட்டத்தில், ரேஷனை, அரிசிக்குப்பதில் நெல்லாகத்தருமாறு கேட்பவர்களுக்கு நெல்தரவேண்டுமென்றும், ரேஷன் எல்லையிலே விளைந்த நெல் அறுவடையானதும், வீடுகொண்டுவர அனுமதி தருவதில் காலதாமதம் ஏற்படுவதால் பண்டம் பாழாகிவிடுவதால், மேற்படி அனுமதியைத் தக்ககாலத்தில் விரைவாகத்தரவேண்டுமென்றும். அதுபோலவே, விதை நெல்லை வெளியே கொண்டுபோகும் விஷயத்திலும் உதவிசெய்யவேண்டுமென்றும் சர்க்காரைக்கேட்டுக்கொள்வதாகத்தீர்மானங்கள்கொண்டுவந்துவிளக்கிப்பேசித்தோழர் A. தங்கவேலர் மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றிவைத்தார். மற்றும் நெசவாளருக்குத்தரப்படும் நூலின் அளவு அவர்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லாததால், வேலையின்றித்தவிக்கிற காரணத்தால், அந்த அளவை அதிகப்படுத்தவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## பார்வதி பி. ஏ.

மல் பூட்டைத்திறக்க முடியும், கொஞ்சம் கூர் இருக்கிற கத்திகிடைத்தால், இழுப்பும்போடத்தெரியும், இப்படிப்பலவேலை தெரியும், சுமாராக."

"திருட்டுப்பயல்தானா, சரி கிடக்கட்டும். உனக்குச் சோறுகிடைக்க நான் வழி செய்கிறேன், நான் சொல்லுகிறபடி கேட்கவேண்டும்"

"கேட்கிறேன்.பழையவேலையா,புதிசா இருக்கா சாமி"

"பழைய அனுபவத்தை வைத்துக் கொண்டு புதிய வேலை ஒன்று செய்யணும். இதோபார், நான் உன்னைப்போல பண்டாரப்பயல் இல்லை—இப்படி ஆண்டிபோல வேஷம்போட்டு இருக்கிறேன். நான் பெரியபோலீஸ் ஆபீசர்"

"ஐயயோ! போலீசு சாமியா நீங்க. புண்யம் உங்கபுள்ளை குட்டிகளுக்கு. என்னை மாட்டிவிட்டுடாதிங்க"

"மடையா! சும்மாகிட, மிரளாதே, ஆண்டிவேஷம் போட்டிருக்கிறேன் என்பதை மறந்துவிடு; ஆண்டி என்றே நினைத்துக்கொள்"

"நெஞ்சிலே பயம் புகுந்துகுடையுதே சாமி"

"பயத்தோடு வேலைசெய், உனக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாதபடி நான்பார்த்துக்கொள்கிறேன்"

"சரி எஜமான்." (தொடரும்.)

## சுயமரியாதை நீதி

4-ம் பக்கத் தொடர்ச்சி.

பாட்டுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. மணவினை முடிந்தபின் நண்பகல் ஊண் அருந்த இருவருங் குறிப்பிட்ட இடத்திற்குப் போனோம். நாங்கள் அவ்விடம் சேருமுன் சில நூல்காரர்கள் சாப்பிட்டு விட்டு, உடலில் சந்தனம் பூசி, வாயில் வெற்றிலை புகையிலை மென்றுகொண்டு. விசிறி பிடித்து வீசிக்கொண்டு தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் வெளியில் நடந்த களைப்பால் திண்ணையில் ஒருபுறம் உட்கார்ந்தோம். "சாப்பிட உள்ளே போகலாமே" என்றார் எங்களைப்பார்த்த அவர்களுள் ஒருவர். காலையில் குளியாத சில நூல்காரர்கள் குளிக்கப் போயிருப்பதாயும் அவர்கள் குளித்துவிட்டு வந்து சாப்பிட்ட பின் நாங்கள் சாப்பிடலாம் என்றும் இன்னொருவர் சொன்னார். அரைமணி நேரம் பொறுத்துக் குளிக்கச் சென்றவர்கள் திரும்பினார்கள். இதற்குள் திண்ணையிலிருந்தவர்கள் படுத்துக் குறட்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். என்னுறவினர் உட்கார்ந்த இடத்தில் சுவரில் சார்ந்துகொண்டிருந்தார். நான் உட்கார்ந்து கொண்டும் திண்ணையின் கீழிருந்த பந்தலினடியில் காற்றுக்காக உலாவிக்கொண்டுமிருந்தேன். இன்னும் அரைமணி நேரம் பொறுத்துப் பிந்திவந்தவர்களும் சாப்பிட்டுவிட்டுவந்து சந்தனம் பூசி வெற்றிலை புகையிலை மெல்லத்துவக்கினார்கள். முதலிற் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினவர்களிற் சிலர் எழுந்து உட்கார்ந்துகொண்டும், சிலர்படுத்துப்புரண்டு கொண்டும் இன்னும் சிலர் குரட்டையிலிருந்து நீங்காமலும்இருந்தார்கள், "இப்பொழுது சாப்பிடப்போகலாமே" என எங்களைப் பார்த்து உறக்கம் நீங்கி உட்கார்ந்த ஒருவர் சொன்னார். உடலில் சந்தனமும் வாயில் வெற்றிலை புகையிலையும் கையில் விசிறியுமுடைய புதியவரொருவர் சமையல்காரர்கள் இன்னும் சாப்பிடவில்லை என்றும் அவர்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் நாங்கள் சாப்பிடப் போகலாமென்றும் சொன்னார். மற்றவர்களை விடப் பருத்த உடலுடன் அரைத்தூக்கமாகப் படுத்திருந்த ஒருவர் எங்கள் இருவரையும் பார்த்து, "முற்பிறப்பில் யாரைப் பட்டினியிருக்கவைத்துச் சாப்பிட்டீர்களோ, இப்பிறப்பில் இப்படி வாய்த்தது" எனச் சொன்னார். என் உறவினர் சுவரில் சாய்ந்தபடியே தலையை அசைத்துக்கொண்டார். உலாத்திக் கொண்டிருந்த நான் படுத்திருந்தவரைப் பார்த்து, "முற்பிறப்பு, பிற்பிறப்பு உண்டோ இல்லையோ, எனக்குநம்பிக்கை இல்லை. முற்பிறப்பும், பிற் பிறப்பும் உண்டென்பதும் முற் பிறப்பில் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கவாறு மறுபிறப்பில் நலம் தீது வருமென்பதும் உங்கள் உறுதியான கொள்கையென்பது உங்கள் வாய்ப்பிலிருந்துதெரிகிறது. யாரையாவது நான் பட்டினிபோட்டிருந்தால் தெரியாமல் பட்டினிபோட்டிருக்கலாம். தெரிந்து போட்டிருந்தாலும் அதனால் அடுத்த பிறப்பில் பட்டினிபோடப்பட வேண்டிவரும் என்று தெரியாது செய்த செய்கையாயிருந்திருக்கலாம். இப்பொழுது தெரிந்தும் இனிவரப் போவது தெரிந்தும் இவ்வாறு நடந்துகொண்ட உங்களுக்கு வெறும் பட்டினியோடு போமா வேறு கேடும் வருமா என்பதற்காக இரங்குகிறேன்" என்று சொன்னேன். எங்கள் முகமாக ஒருசாய்த்துப் படுத்துக்கொண்டு மேலே கண்ட புன்மொழிகளைச் சொன்னவர், என் சொற்களைக்கேட்ட பின், மனமாற்றுக்குறி ஒன்றுமின்றி, மறுபுறமாகத் திரும்பிக் கொண்டு மறுபடி குறட்டை போடத் துவக்கினார். பக்கத்திலிருந்த மற்ற அக்குழாத்தார் தங்களுக்குள் காதுக்குள் பேசிக்கொண்டார்கள். இப்புன்மொழி சொன்ன கன்னெஞ்சும்குற்றறிவும்உடையார் நந்தனைத்தீயில் பொசுக்கிக்கொன்ற சிதம்பரத்தில் சட்டவாதத் தொழில் புரிந்து செட்டியார் பணத்திற்குப் பங்காளியாயிருந்த செல்வாக்கும்செல்வமும் தேடிய ஒருவரென என்னுறவினர் பின்னால் எனக்குச் சொன்னார். அவருடைய பருமனையும் வயதையும் தூக்கிப்பாராமல் நான் துடுக்கான விடை சொல்லிவிட்டதாக இப்புன்மொழிக் கன்னெஞ்சுக் குற்றறிவினர் அன்று மாலை சற்றுச் சிணுங்கிக் கொண்டாராம். என் சொல் அவர் உள்ளத்தில் உரைக்க அவ்வளவு நேரமாயிற்று. மறுபிறப்புக் கொள்கையுடைய இவ் விழியுள்ளத்தவரை முடிச்சுமாறி என்று குற்றம் சாட்டப்போதுமான காரணம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவரை வேறுஎன்னென்றழைக்கலாம் என்பதைக்கட்டுரையாளராவது அவர் வினவும் அறிஞர்களாவது எடுத்துச்சொன்னால் நானும் பிறதன்மானக்கொள்கையார்களும் என்றும் மறவா நன்றியுடையோராவோம். மறுபிறப்புக்கொள்கையிலுண்மை எவ்வாறிருந்தாலும், அதை ஓயாமற் சொல்லுகிறவர்கள் பிறர் பொருளை வவ்வுந்திறனுடையாரும், அவர் வலையிற்பட்டு மதியிழந்த மாக்களுமாவார்கள், என்பதைஇதுவரை கட்டுரையாளர் அறிந்திராவிட்டாலும் இனியேனும் ஆய்ந்தறியஅவரை வேண்டுகிறேன்.

செங்கற்பட்டு மாநாட்டில் மக்கள் பெயர்களுக்குப் பின்னால். நாயுடு, முதலியார், பிள்ளை என்ற சொற்களைச்சேர்க்காது ஒழித்துவிட்டால் மக்களுக்குள் ஒற்றுமையுண்டாகும் என்று செய்த தீர்மானத்தையும், தீர்மானம் செய்தோர்கள் அறிவையும், பிறர்மானம் பேணும் முறையில் கட்டுரையாளர் எள்ளனம் செய்கிறார். இத் தமிழ் நாட்டிலிருந்த புகழேந்திப் பிள்ளையையும், ஒட்டக்கூத்த முதலியாரையும், கபிலச் சாம்பாரையும், காளமேகச் செட்டியாரையும், படிக்காசுக்கோனாரையும், நக்கீர ஆசாரியையும் செயங்கொண்ட நாய்க்கரையும்பற்றி நூல்களில் படித்ததுண்டா, அல்லது பழைய தமிழர்கள் வாலில்லாப் பெயருடையோராய் இருந்தனரா எனக் கட்டுரையாளர் ஆராய்வாராக, அல்லது அறிஞர்களைக்கேட்டு அறிவாராக. ஐயர் என்ற வாலைத் தனக்குச் சேர்த்துக் கொண்டு அது ஒட்டுவதற்காக மற்றவர்களுக்கும் வேறு வேறு தனிவாலை ஒட்ட வைத்தார்கள் என்பது சரிதானென்றும் பார்ப்பாராக. இவ்வொட்டு வேலை இன்றும் நடந்து வருவது உற்றுநோக்குவார்க்குத் தெரியும்.

கடவுணர்ச்சியுள்ளோர் கூட்டத்தில் அறிவியல்காரர்கள் வந்து கடவுள்வணக்கம் செய்யக்கூடாதென்றும் தங்கள் கொள்கைகளைத் தீர்மானமாகக்கொண்டுவரவேண்டுமென்றும் வலுச்செய்வதாகக் கட்டுரையாளர் கூறினார். எந்தக்கூட்டத்தில், எப்பொழுது எதை வற்புறுத்தினார்கள் என்று திட்டமாகச் சொல்லியிருந்தால் திட்டமான விடை சொல்ல முடிந்திருக்கும். முற்காலத்தில் தமிழ்மக்கள் தண்ணீரில் குளித்து உடல்நலம் பெற்று வாழ்ந்தார்கள், இப்பொழுது வெந்நீரில் குளித்து உடல்நலம் குன்றி வருகிறார்கள், ஆகையால் தண்ணீரில் குளிப்பதன் நன்மையைப் பரப்ப ஒரு கூட்டங்கூடவேண்டுமென அவ்வபிப்பிராயமுள்ள பல இனமக்களையுங் கலந்து பொதுக்கூட்டங் கூட்ட முடிவுசெய்த பிறகு, அக்கூட்ட அழைப்பு அறிக்கையின் தலைப்பில் லிங்கத்தையாவது நாமத்தையாவது பிறையையாவது, சிலுவையையாவது அச்சிட யாருக்கேனும் உரிமையுண்டா? அப்படிப்போட முயன்றால் அதைத்தடுக்க மற்றவர்களுக்கு உரிமையில்லையா? பிறகு அப்படிக்கூடிய கூட்டத்தில், "தோடுடைய செவியன், விடையேறி" என்ற பாடலைப்பாட ஏற்பாடு செய்வதும், நியாயங்கேட்டால் குளத்தில் இறங்கித் தண்ணீரில் தகப்பனார் குளித்த பொழுது பிள்ளைபாடிய பாட்டு இது; ஆகையால் தண்ணீரின் பெருமையைப் பேசக்கூடிய கூட்டத்தில் இந்தப்பாட்டைப்பாடுவது பொருத்தமாகும் என வாதாடுவதுநேர்மையா? தைமாதப்பனியைப்பற்றிப் பேசக்கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில், "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று வழிபாடு ஆரம்பித்து, கிறிஸ்து தைமாதத்தில் பனி இரவில் பிறந்தவரானபடியால் அம்மாதம் பனியைப்பற்றிப் பேசுங் கூட்டத்தில் கிறிஸ்துநாதர் சொன்ன கடவுள் வழிபாட்டைச் சொல்வது சரிதான் எனச் சொல்வது முறையா? அந்தக்கூட்டத்தில் பெரும்பாலார் கிறிஸ்தவர்களாக இருக்குங் காரணத்தால் அவ்வுரிமை அவர்களுக்கு வந்துவிடுமா? தென்னையின் சிறப்

(10ம் பக்கம் பார்க்க)

## சுயமரியாதை நீதி.

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

யைப்பற்றிப் பேசக்கூடிய கூட்டத்தில் "அல்லாஹு அக்பர்" என ஆரம்பித்து, தென்னை, மணற்பாங்கான நிலத்தில் வளரும்; அரேபியா பெரிய மணல்நாடு; அம்மணல் நாட்டிற் பிறந்தவர் மகம்மது அவர் சொன்னது "அல்லாஹோ அக்பர்; தென்னந்தோப்பு முதலாளிகளிற் பலர் மகம்மதியர்கள் என்று காரணம் சொல்லி வற்புறுத்துவது பிறர் கூட்டுறவை விரும்புவோரின் நடவடிக்கையா? தமிழின் பழமையை எடுத்துக்காட்டுவதற்குக் கூடிய பொதுக்கூட்டத்தில், "பித்தா பிறைசூடி," என்று துவக்கிய சிவ வழிபாட்டுப் பாட்டைப் பாட ஏற்பாடு செய்வதும் நியாயம் கேட்டால் தமிழிசை பரப்ப விரும்பிச் செய்ததாகச் சொல்வதும் நேர்மையா? ஒப்பாரி ஜர்மன் இசையா, ருஷிய இசையா? தனித் தமிழ் இசை தானே. அவ்விசையும் அதிலுள்ள நுண்ணறிவையுங் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டாமா? காலிலும் இடுப்பிலும் மணிகட்டி, ஒரு கையில் சோழியும் ஒரு கையில் அரிவாளும், தலையில் தீப்பந்தமும் பூண்டு, "மாடன், இருளன், காட்டேரி" என்று துவக்கும் பாட்டுப் படுவது, காதணி பூண்டு காளையேறி சுடலையாடிய காலத்திற்கு முற்பட்ட தமிழ் நாகரிக வெளிப்பாடல்லவா? அதையும் பார்த்து அவ்விசையையுங் கேட்க ஏற்பாடு செய்யவேண்டாமா? இராமேஸ்வரக்கோயிலை மராட்டிய நூற்காரர்களும், திருச்செந்தூர்க்கோயிலை மலையாள நூற்காரர்களும், பழனிக்கோயிலை பிற நூற்காரர்களும் சில ஆண்டுகளுக்குமுன் தாயகமாக்கிக்கொண்டதை, அவர்களிடமிருந்து விடுவித்து உரியாரிடம் சேர்ப்பிக்கக்கூடிய கூட்டத்தில் கோயில் வழிபாட்டில் நம்பிக்கையில்லாவர்கள் குறுக்கிடல் குற்றமாகும். மாடனுக்குத் தென்னங்கள் படைப்பது சிறப்பா, பனங்கள் படைப்பது சிறப்பா, என்று முடிவு செய்யக்கூடிய கூட்டத்தில் கள்ளுண்ணார் வந்து தலையிடுவது தவறாகும். தமிழைப்பற்றிப் பேசக்கூடிய பொதுக் கூட்டத்தில் மதுரைவீரன் சிறப்பைச் சொல்ல வருவதும் தடுத்தால் கோணிக் கொள்வதும் எள்ளளவும் சரியான நடையல்ல. சைவத் தமிழர் கூட்டமென்றாவது கடவுள் பாட்டுத் தமிழர் கூட்டம் என்றாவது தனிக்கூட்டங் கூட்டிப் பாமாலை அணிவதைப்பிறர் குறை கூறார்கள். பொதுத் தமிழ்கூட்டம் என வெளியிட்டுவிட்டு சமயக்குறியையும் சமய முறைகளையும் சமயக்கொள்கைகளையும் புகுத்துவது குற்றமா, அதைத் தடுப்பது குற்றமா, என அறிஞர்களே கட்டுரையாளனுக்கு விடைகூறட்டும்.

★

## வாழ்க எதிராஜ்!

எல்லோரும், எக்காலத்தும், எவ்விதத்திலும் கல்வியைக் கருந்தனமாகக்கருதிக்கற்கவேண்டியது அவசியம். அதிலும் இளமையிலேயே, அறிவுக் கல்வியைப் போதித்து, நல்லொழுக்கத்திலும், நன்னடக்கையிலும் சீர் திருத்தி த்தங்கள் குழவிகளைப்பிற்கால அறிஞராகவும், அரசராகவும், வீரராகவும், வித்தகராகவும் ஆக்குபவள் தாயேயாகலின், அவள் கல்வித்துறையில் தலை சிறந்து விளங்கவேண்டுவது அவசியத்திலும் அவசியம்.

இக்கருத்துபற்றியே தோழர். V. L. எதிராஜ் அவர்கள் மாதர் கல்லூரிக்கு மகிழ்ச்சியுடன் 10 லட்சம்ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார். கல்விக்காகப் பல பெரியார்கள் பொருளுதவி புரிந்திருக்கிறார்களெனினும், பெண்கல்வி வளர்ச்சிக்காகப் பெரும்பணம் தந்துதவிய தோழர். எதிராஜ் அவர்களின் தன்னலங் கருதாத்தகைமைக்குணத்தை எவரும் போற்றாதிருக்கமுடியாது.

வாழ்க எதிராஜ் நீடுழி! வளர்க அவர் தம் நல்லறம்! மலர்க மாணவமணிகள்! மிளிர்க மகளிர்மாண்பு!

வேலூர் நகராண்மைக்கழகத்தில் அன்னாரை வரவேற்கவும், வாழ்த்துத்தாள் வாசித்துக்கொடுக்கவும் தீர்மானிக்கப் பட்டதுபோற்றத்தக்கது.

இனியேனும் நம்நாட்டுச் செல்வந்தர்கள் தாங்கள்பாடுபட்டு ஈட்டியபொருளை, அர்த்தமற்ற தானங்கள்தருதல், ஆலயம் அமைத்தல், அபிடேகம்செய்தல், ஆரிய வேதபாட சாலைகள்நாட்டுதல் என்பன போன்ற பயனற்றவழிகளில் பாழ்படுத்தாமல் அறிவாலயம் அமைக்கச் செய்வாராக! அண்ணல் எதிராஜ் அவர்களைப்பின் பற்றிநடப்பார்களாக!

## பிறப்பு.

தாத்தையங்கார்பேட்டைத்தோழர். M. S. M. ராஜன் அவர்களின் வாழ்க்கைத்துணைவிதோழியர் அங்கம்மாளுக்கு 7—10—44ல் ஓர் ஆண்மகவு பிறந்து அதற்குத் தியாகரத்னம் என்ற பெயர் சூட்டியதன் அறிகுறியாகத் திராவிடநாடு இதழுக்கு ரூ. 1. நன்கொடை நல்கப்பட்டது.

## திருமணம்.

நாகூர் தோழர். செ. மு. அப்துல் அஜீஸ்மரைக்காயர் குமாரர் தோழர். M. A. பக்கர் அவர்கட்கும் நாகை L. அமீதுசுல்தான் மரைக்காயர் குமாரத்தி தோழியர் முகம்மது சையதுநாச்சியாருக்கும் 14-12-44ல் திருமணம் நடந்ததன்பொருட்டுத் திராவிடநாடு இதழுக்கு ரூ. 1. நன்கொடைதரப்பட்டது.

## பெரியபுராண ஆராய்ச்சி

2-ம் பக்கத் தொடர்ச்சி.

இனி, "யாதுசமயமும் வணங்கும் இயல்பதாகி" என்ற சொற்றொடரின் நேர்பொருளை எடுத்துப்பார்த்தால், யார்யார் எந்தெந்தச் சமயங்களைத் தாங்கள் வழிபடுஞ் சமயங்களாகக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் எல்லோரும் இச்சைவசமயத்தையும் தங்கள் சமயமாகக் கொண்டு வணங்குவர் என்ற பொருளையே தருகின்றது. ஆனால், ஒரு முசல்மானாவது ஒரு கிறித்தவனாவது இச்சைவ சமய வழிபாட்டை மேற்கொள்வதை யாம் கண்டிலம். ஒரே குடும்பத்தில் கணவன் சைவனாகவும், மனைவி கிறித்தவளாகவும் இருக்கிறார்கள். அவர்கள்கூடத் தாங்கள் மேற்கொண்ட சமயத்தையன்றிக், கணவன் மேற்கொண்டுள்ள சமயத்தை மனைவியோ, மனைவி மேற்கொண்டுள்ள சமயத்தைக் கணவனோ இதுவும் நல்லசமயந்தான்என்றுஒப்புக்காவதுகூறி வணங்குவதையாவது யாம்கண்டதில்லை. இங்ஙனம் கணவனுக்கொரு சமயமும், மனைவிக்கு இன்னொரு சமயமுமாக இருவேறு சமய வழிபாடுகளோடுள்ள பல குடும்பங்களை யாழ்ப்பாணத்தில் இன்றும் காணலாம். இத்தகைய குடும்பங்கள் வாழும் வீடுகளில், ஒரு அறையில் இயேசுவின் படத்தையும், சிலுவையையும், செப மாலையையும், விவிலிய (பைபிள்) நூலையும்; இன்னொரு அறையில் சிவ—சுப்பிரமணியர்களின் படங்களையும், வேலையும், உருத்திராக்கமாலையையும், தேவார—திருவாசகங்களையும் காணலாமே தவிர, கணவன் பின்பற்றி வழிபடும் சமயத்தை மனைவி கடைப்பிடித்து வழிபடும் முறையை அங்கு காணவே முடியாது.

எனவே, ஒரே குடும்பத்திலிருக்கும் கணவன் மனைவியர்க்கிடையே சமய வழிபாடுகளில்இத்த வேறுபாடு இருக்கிறதென்றால், ஒரு சமயத்தையே தங்கள் அடிப்படைக்கொள்கையாகக் கொண்டு பிரிந்துவாழும் ஒரு இனம், இன்னொரு இனத்தவரால் வழிபடப்படும் சமயத்தையும் தங்கள் சமயமாக எண்ணி வணங்கும் என்று கூறுவதில் தினைத்துணையாவது நம்புவதற்கோ ஆராய்ச்சிக்கோ இடமிருக்கமுடியுமாஎன்பதை எண்ணிப் பாருங்கள், அன்பர்களே. (தொடரும்)

## திராவிடர் கழகங்கள்.

### போரூராணி.

14—12—44ல் இவ்வூரில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டுக்கழகக்குழுவினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### ஆரணி.

சேலம்மாநாட்டுத் தீர்மானத்தின்படி ஷை ஊர். தெ. இ. ந. உ. சங்கத்தைத் "திராவிடர் கழகம்" என 15—12—44ல் மாற்றப்பட்டது.

# ★ நாயகம் நல்கிய நன்மொழிகள் ★

## கட்சியில் சமநீதிவேண்டும்.

"மக்களின் எல்லாத்தொகுதிகளுக்கும் ஒத்தஉரிமை அளிக்கவேண்டும் என்றகட்சிக்கொள்கையை சம்பளவேலைகளிலும் வற்புறுத்துவதில் கட்சித்தலைவர்கள்காட்டும் அக்கரைவேண்டிய அளவுக்கு ஆயிரத்தில் ஒரு பங்குகூடஇல்லை. அரசாட்சியில் நேரே சம்பளம்பெறும்வேலையில் மாத்திரமல்ல, அரசாட்சியின் பணஉதவிபெறும், அல்லது அரசாட்சியின் பாதுகாப்பில் தொழில்புரியும், நிலையங்களில் சம்பளம்பெறும்வேலையிலும், மக்களின் ஒவ்வொருதொகுதியினரும் அத்தொகுதியின் எண்ணிக்கை உரிமைக்குத் தக்கபடி வேலைபெறஏற்பாடுசெய்யவேண்டும். தெளிவாகச் சுருங்கச்சொல்லின், அரசாட்சி நாட்டாண்மை, நகராண்மை, புகைவண்டி அரசாட்சியின் உதவிபெறும்தனிஉடைமைப்பள்ளிக் கூடங்கள், வாசகசாலைகள், இவை ஒவ்வொரு துறையிலுமுள்ள வேலையில் ஒவ்வொரு படியிலும் பார்ப்பனர்கள்; அவர்கள்எண்ணிக்கை உரிமைப்படி நூற்றுக்கு மூவருக்கு மேல் வேலை பெறக்கூடாது. இப்படியே ஒவ்வொரு தொகுதிக்கும். இது புதுநீயமனத்தில்மாத்திரமல்ல,உள்ளவேலைமுழுவதிலும் இந்தத் தாரணைஇருக்கவேண்டும். பார்ப்பார்களும் அவர்எண்ணிக்கையின் உரிமைப்படி தோட்டிவேலையிலும் அமைச்சர் வேலையிலும்பங்குபெற நீதிக்கட்சி உதவிபுரியவேண்டும், பிறப்பால் வேற்றுமையுள்ள அளவும் இந்நீதிமுறைக்கு இடமிருந்தேதீரும். இக்கொள்கையில் ஐயமுள்ளவர்கள், அதை வற்புறுத்தத் தயங்குபவர்கள், நீதிக்கட்சியில் இருக்கவோ, அதைநடத்தவோ கருதுவது வஞ்சகமாகும். அப்படிப்பட்டவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும் கட்சிக்கு வஞ்சகர்களேயாவார்கள். அப்படிப்பட்டவர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலொழிய கட்சிஇளைத்துக்கொண்டேதான்போகும்."

## கடவுள் வழிபாடு.

"பாரோஸ் (Barrows) என்ற அமெரிக்கக் கிறிஸ்தவக் கலைஞர்பெயரால் நடைபெற்றுவருகிற கிறிஸ்துமத சொற்பொழிவாளர் ஒருவர் நம்நாட்டின் பல இடங்களில் சிலகாலத்துக்குமுன் சொற்பொழிவாற்றினர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் அண்டர்சன் மண்டபத்தில் ஆறுநாள் தொடர்ந்துநடந்த சொற்பொழிவு ஆறுக்கும் நான்போயிருந்தேன. சொற்பொழிவாற்றியவர் கிறிஸ்தவர். தலைமைபூண்டவர்களில் ஐவர் கிறிஸ்தவர். கேட்டவர்களிற் பெரும்பாலரர் கிறிஸ்தவர். சொற்பொழிவின்நோக்கம்கிறிஸ்தவஉண்மையைப்பரப்புவது. சொற்பொழிவுக்குப் பணம்ஈந்தவர் அந்நோக்கம்பூண்ட கிறிஸ்தவர். எனினும் எந்நாளிலாவது சொற்பொழிவின் முதலிலாவது நடுவிலாவது கடைசியிலாவது கிறிஸ்து வழிபாடாவது கடவுள் வழிபாடாவது வணக்கமாவது கிடையாது. இதுவே அறிவுடையோரின் முன்மாதிரியான நடக்கை. கடவுள்பற்றுடைய நம் நாட்டாரும் இதைப் பின்பற்றுவார்களாக."

## பயிர்த்தொழில்செய்யும்பாட்டாளி.

"விளைநிலங்கள்முழுவதுமாவது,அவற்றுள் பெரும்பாகமாவது, பயிரிடும் பாட்டாளிகளிடமிருந்தால் நாட்டின்விளைவு பெருகி, உணவுப்பொருள்களின் விலை குறைந்து துரைத்தனக்கைதிகள்,பட்டாளங்கள் இவர்களின் உணவுச்செலவும், துரைத்தனஊழியச் சம்பளச்செல்வும் குறைந்து துரைத்தன மொத்தச்செலவும் குறையஇடமாகும்.

பயிரிடுபவர்களிடம் நிலம் இருப்பதால் வரிவரும்படிகூடவும், செலவு குறையவும் வரிப்பளுவைப் பற்றிய கூக்குரலுக்கு விடைசொல்வதில் கழிக்கவேண்டிய நேரத்தைமற்றத் துரைத்தன மேம்பாட்டில் கழிப்பதற்கும் இடமாகும். ஆகையால் முதலாளிகளிடமுள்ள நிலங்களைப் பயிர்த் தொழிலாளிகளிடம் போகச்செய்வது துரைத்தனத்தாரின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்."

## ஆலைத்தொழிலாளர்களுக்கு.

"பக்கிங்காம்கர்நாடக ஆலைத்தொழிலாளர்களிடம் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தேன் கூட்டம்கலைந்தபொழுது ஒரு தொழிலாளர் என்னிடம்வந்து, "இப்படி நாங்கள்சேமித்துப்பெருக்குகிறதொகையைஎன்னசெய்ய? என்றுகேட்டார். அவர்கேட்டதிலிருந்து அவருடையமனப் பான்மை தெளிவாயிற்று. தொழிலாளிகளிற் பலர் சம்பாதிப்பதும், செலவுசெய்வதுந்தான் தங்கள் கடமை—சேமிப்பதும் பணம்திரட்டுவதும் தங்களுக்குப் புறம்பானது, என்று எண்ணியிருந்தது வெளியாயிற்று. அவர் கேட்ட கேள்விக்குடனே, "சேமித்துச்சேர்த்த தொகையிலிருந்து ஆலைப்பங்குகளை விலைக்குவாங்கிமுதலாளியாகுங்கள்" என்று கேட்டவரிடமும், பக்கத்தில் நின்றவரிடமும் விடைசொன்னேன்."

---

இந்தி எதிர்ப்பின் சர்வாதிகாரியாய்இருந்து

**3-6-38ல் கைதுசெய்யப்பட்டு 16-12-39ல் விடுதலையடைந்த**

## தோழர். சி. டி. நாயகம்

**அவர்கள்,**

**"கட்டாய இந்தியை ரத்துசெய்துவிட்டனர் என்ற செய்தியை யான் அறிந்ததும், எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உண்மையிலேயே இது திராவிட மக்களின் ஒப்பற்ற முதல் வெற்றியாகும். என்றாலும் இது ஒரு விடயத்தைக்குறித்தே நாம் பூரண விடுதலையடைந்து விட்டதாகவோ, வெற்றியேற்பட்டதேன்றே மகிழ்ச்சியடையமுடியாது. நமக்கு யாவற்றிலும் முக்கியமாகத் திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டிய எல்லா முயற்சிகளுக்கும் நமது தலைவர் பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டுழைத்து நம்முடைய பரிபூரண வெற்றியைக்கூடிய விரைவில்காணவேண்டும்."**

*என்று சென்னை அரசாங்கத்தார் கட்டாய இந்தியை ரத்து செய்தபொழுதுபேசியது குறிப்பிடத்தக்கது*

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

**காஞ்சி திராவிடர்கழகம். இசைவிழா!**

9—1—45 செவ்வாய்

13. எட்டயபுரம் சமஸ்தானவித்வான், தருமபுர ஆதீன இசைப்புலவர், இசையரசு திரு: M. M. தண்டபாணி தேசிகர் & பார்டி ... ... ) பாட்டு

கட்டணம்:- சீசன் டிக்கட் .வரியுள்பட ரூ. 12; 6; 3-8-0. பெண்களுக்கு ரூ. 6; 3-8-0.

கே. எஸ். முனுசாமி, தலைவர். டி. பி. எஸ். பொன்னப்பா, காரியதரிசி.

# காஞ்சி திராவிடர் கழகம். இசை விழா!

## (கழகக் கட்டிட உதவி நிதிக்காக)

## 4—1—45 வியாழன்

1. இசைக் கவிவர்ணர், தமிழ்ச் சங்கீத வித்வான்
மதுரை திரு: மாரியப்ப சுவாமிகள் ... ... ... பாட்டு
மதுரை திரு: வேலுசாமி அவர்கள் ... ... ... ஹார்மோனியம்
மாயவரம் திரு: நடராச சுந்தரம் அவர்கள் ... ... மிருதங்கம்

2. திருவாவடுதுறை ஆதீன நாதஸ்வர வித்வான்
(கக்காயி) திரு: T. N. R. நடராச சுந்தரம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
அபிநவ நந்தீசர், தவுல் அரசு, நீடாமங்கலம்
திரு: N. T. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ... ... ) தவுல்
நீடாமங்கலம் N. T. M. ஷண்முகவடிவேல் அவர்கள் ... )

## 5—1—45 வெள்ளி

3. ஸங்கீத வித்துவபூஷணிகள், தஞ்சை
லக்ஷ்மி, கௌரி சகோதரிகள் ... ... ... பாட்டு
திருவீழிமிழலை, திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... ... பிடில்
தஞ்சை, திரு: இராமமூர்த்தி அவர்கள் ... ... மிருதங்கம்

4. திருப்பாம்பரம் சங்கீத வித்வான்
திரு: T. N. சுவாமிநாதன் அவர்கள் ... ... ... புல்லாங்குழல்
மாயவரம் வித்வான் திரு: கோவிந்தராஜு அவர்கள் ... ... பிடில்
குற்றாலம் வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... ... மிருதங்கம்

## 6—1—45 சனி

5. நாச்சியார் கோயில் வித்வான்
திரு: ரங்கசாமி அவர்கள் ... ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... பிடில்
சென்னை திரு: வீருசாமி அவர்கள் ... ... மிருதங்கம்

6. சங்கீத வித்வபூஷணி சாட்டியக்குடி
மீனாட்சிசுந்தரம்மாள் அவர்கள் ... ... பாட்டு
திருவீழிமிழலை வித்வான் திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... பிடில்
புதுக்கோட்டை வித்வ திலகம்
ரங்கநாயகி அம்மாள் அவர்கள் ... ... மிருதங்கம்

7. குழிக்கரை, அவையானந்த அருட்பெருஞ் செல்வ வித்வான்
திரு: K. S. பிச்சையப்பா அவர்கள் ... ... நாதஸ்வரம்
யாழ்ப்பாணம், வித்வான் திரு: சண்முகசுந்தரம் அவர்கள் ... ) தவுல்
குழிக்கரை வித்வான் திரு: V. பக்கிரிசாமி அவர்கள் ... )

## 7—1—45 ஞாயிறு

8. திருவாரூர் சங்கீத வித்வான்
திரு: T. V. நமசிவாயம் அவர்கள் ... ... பாட்டு
கும்பகோணம், வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... பிடில்
தஞ்சை திரு: இராமமூர்த்தி அவர்கள் ... ... மிருதங்கம்

9. தஞ்சை, சங்கீத வித்வான்
திரு: T. M. தியாகராசன் அவர்கள் ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: G. பாலு அவர்கள் ... ... பிடில்
தஞ்சை வித்வான் திரு: மகாலிங்கம் அவர்கள் ... ... மிருதங்கம்
சென்னை வித்வான் திரு: வேலாயுதம் அவர்கள் ... ... கஞ்சிரா

## 8—1—45 திங்கள்

10. அண்ணமலைப் பல்கலைக்கழக இசையாசிரியர், இசைமணி
மயிலம் ப. வச்சிரவேலு அவர்கள் ... ... பாட்டு
கும்பகோணம் வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... பிடில்
காஞ்சி திரு: முனுசாமி (ஆபீலா) அவர்கள் ... ... ...மிருதங்கம்

11. தமிழ் இன்னிசைப் பிரயோகர்
சிதம்பரம், திரு: ஜெயராம் அவர்கள் ... ... பாட்டு
தஞ்சை வித்வான் திரு: சந்தானமய்யா அவர்கள் ... ... பிடில்
காரைக்கால் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... மிருதங்கம்

12. அகில உலக நாதஸ்வர ஏகசக்ராதிபதி திருவாவடுதுறை
திரு. T. N. இராஜரத்தினம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
பாலநந்தீஸ்வர, லய, பூஷண, நாச்சியார் கோயில்
திரு: N. P. ராகவன் அவர்கள் ... ... ) தவுல்
திருவாவடுதுறை, திரு: சங்கரன் அவர்கள் ... ... )

(11-ம் பக்கம் பார்க்க.)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 H[illegible]nnet Conjeeveram.